Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.


முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 11 வெள்ளிக்கிழமை (24.01.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 115

08



மோதல்

10




இல்லை

## அமெரிக்காவுடன் பன்முக உறவு

## ஐ.நா. தீர்மானத்தால் பாதிப்படையக்கூடாது

### ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை



(கொழும்பு)

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் பன்முகத் தன்மையான உறவு உள்ளது. இந்த உறவு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானத்தினால் பாதிபடையக்கூடாது என்றும் மேற்படி தீர்மானம் எதிர்பார்ப்பதைவிட எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும் என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஏசியா பவுண்டேசனின் பணிப்பாளர்களான அமெரிக்காவின் முன்னணிப் பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் பலமுகங்களைக் கொண்டது என்றும், குறிப்பாக பாதுகாப்பு, உயர் கல்வி, பொது முதலீட்டுத் துறைகளில் உறவுகள் மிகவும் சிறப்பாக தொடர்வதாகவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், (19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா செல்லும் குழுவில் ஐ.தே.கட்சி பங்கேற்காது

### கபீர் காசிம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா செல்லவிருக்கும் அரசதரப்பு இராஜதந்திரிகள் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து கொள்ளப் போவதில்லை என்று அக்கட்சி இப்போது அறிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்கும் இலங்கைப் பிரதிநிதிகள் குழாமில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிப்பார்கள் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது குறித்த பிரதிநிதிகள் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்க மாட்டார்கள் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் (19) ஆம் பக்கம் பார்க்க

# மனித உரிமைகள் நிலைவரம்; வொஷிங்டனில் உயர்மட்ட பேச்சு



(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் மனித உரிமை பேணல் விடயத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உயர்மட்ட பேச்சுக்களில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான சிரேஷ்ட இராஜதந்திரிகள் இலங்கை அரசின் சார்பில் பங்குபற்றி வருகின்றனர்.

அதேபோல அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் ஆசிய பசுபிக் விவகாரங்களைக் கையாளும் மூத்த இராஜதந்திரிகள் இந்தப் பேச்சுக்களில் பங்கெடுத்து வருகின்றனர்.

அவசர அவசரமாக வொஷிங்டனுக்கு புறப்பட்டுச் சென்ற பின்னர் இலங்கைக் குழுவினர் ஒன்றுக்கு மேற்பட்ட சந்திப்புக்களில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

ஏற்கனவே ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் நிலைப்பாடுகள் குறித்து விளக்கமளிப்பதற்காக லலித் வீரதுங்க ஜெனிவா சென்றிருந்தார்.

அங்குள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு (19) ஆம் பக்கம் பார்க்க

## நீதியரசர் சிறிஸ்கந்தராசா நேற்று காலமானார்



(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் எஸ். சிறிஸ்கந்தராசா கொழும்பில் நேற்றுக் காலமானார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் (19) ஆம் பக்கம் பார்க்க

## றெக்ஷியன் கொலை வழக்கு; கமலேந்திரனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்ஷியன் கொலை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரனுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை ஊர்காவற்றுறை நீதிமன்றம் நீடித்துள்ளது.

குறித்த வழக்கு விசாரணை நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் எஸ்.லெனின் குமார் மேற்படி உத்தரவை வழங்கினார்.

அத்துடன் இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களென சந்தேகத்தின் பேரில் கைதான றெக்ஷியனின் மனைவி மற்றும் ஜசிந்தன் என்ற இளைஞருக்கும் (19) ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் ஆயர் மீது நடவடிக்கை; வலியுறுத்துகிறது சிங்கள ராவய

(கொழும்பு)

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோருக்கு எதிராக பொலிஸ்மா அதிபரிடம் மேற்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் எவ்வித கவனத்தையும் செலுத்தாது, பிரதமர் அலுவலகத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்திய தமது அமைப்பின் உறுப்பினர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்தமையை கண்டிப்பதாக சிங்கள ராவய அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்படி கத்தோலிக்க ஆயர்கள் நாட்டுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதமைக்கு என்ன காரணம் என அந்த அமைப்பின் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆயர்களின் பொய்யான கருத்துக்கள் தொடர்பில் நாட்டுக்கும், உலகத்திற்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டுக்கு முன்னதாக அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாணவி சடலமாக மீட்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை, மாதனைப் பகுதியில் மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

மேற்படி பகுதியைச் சேர்ந்த முருகதாஸ் பத்மப்பிரியா (வயது - 13) என்ற மாணவியே அவரது வீட்டில் இருந்து நேற்று நண்பகல் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று மாலை மந்திகை மருத்துவமனையில் பருத்தித்துறை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (116,109)

## மனிதப் புதைகுழி விசாரணை; இப்போது சி.ஐ.டி.யினரிடம்



(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகள் இப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பகுதியில் மனித எலும்புக்கூடுகளை தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதுவரையில் 42 முழுமையான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட மாந்தைச் சந்தியிலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்குச் செல்லும் (19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு பிரதம செயலரை மாற்றவேண்டும்; இல்லையேல் மாகாணசபை போர்க்களமாகும்

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பிரதம செயலாளர், ஆளுநர் ஆகியோரை மாற்றம் செய்வது தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கப்படாவிடின் எதிர்வரும் 27 ஆம் திகதி வடமாகாண சபை போர்க்களமாக மாறக்கூடிய நிலைமைக்கு நாங்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

தேர்தல் நிறைவடைந்து 4 மாதங்கள் ஆன நிலையிலும் மாகாண பிரதம செயலாளர் மாற்றப்படவில்லை. இராணுவம் (19) ஆம் பக்கம் பார்க்க

# வீடற்ற திருநகர் மக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் உறுதியளிப்பு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி - திருநகர் பிரதேசமக்கள் எதிர்கொண்டு வரும் வீட்டுப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வினைப்பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் பயனாளிகள் தெரிவு விதிகளுக்கமைவாகதிருநகரிலும் வீட்டுத்திட்டம் விரைவில் நடைமுறைக்குவரும் என்றும் கூறினார்.

நேற்றையதினம் திருநகர் தெற்கு பாரதி முன்பள்ளிகட்டட அமைப்புப் பணியினை அடிக்கல்நாட்டி ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதேஅவர் இவ்வாறுகுறிப்பிட்டார்.

கிளிநொச்சிமாவட்டத்தில் வீடுகள் அற்றஅனைவருக்கும் வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் வீட்டுத்திட்டம் முழுமையாக நிறைவு பெறுகின்றசந்தர்ப்பத்தில் பெரும்பாலானவர்களின் வீடற்ற பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும்.

இந்திய வீட்டுத்திட்டம் நிறைவு பெறுவதற்கு இன்னமும் இரண்டுவருடகால அவகாசம் உள்ளது. குறித்தவீட்டுத் திட்டம் இடைநிறுத்தப்படுவதற்கான எவ்விதசாத்தியமும் இல்லை இந்திய அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்ட முழு எண்ணிக்கையிலான வீடுகளும் நிர்மாணிக்கப்படும்.



இதற்கமைவாக கிளிநொச்சி - திருநகர் கிராமத்திலும் அத்திட்டத்தினூடாக நிரந்தரக்குடியிருப பின்றி வாழுகின்றமக்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படும். குறித்த வீட்டுத்திட்டத்தினை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் பயனாளிகள் தெரிவுவிதிகளுக்கமைவாக தெரிவுகள் இடம்பெற்று வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி தெற்கு பாராதி முன்பள்ளி சுமார் பத்தொன்பது இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை. தவநாதன் அடிக்கல்லினை நாட்டி ஆரம்பித்துவைத்தார். யு.என்.ஹபிடாட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டுவரும் பொதுநோக்கு மண்டபங்கள் மற்றும் முன்பள்ளிக்கான கட்டடங்களைஅமைக்கும் பணியின் தொடர்ச்சியாகவே திருநகர் பாரதி முன்பள்ளிக் கட்டடத்தை அமைக்கும் பணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த திட்டத்திற்கமைவாக சுமார் பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியில் அமையப்பெறவுள்ள விவேகானந்தநகர் மேற்கு முன்பள்ளிக்கான அடிக்கல்லினையும் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பித்துவைத்த மாகாணசபைஉறுப்பினர், யு.என்.ஹபிடாட் நிறுவனத்தின் நிதியுதவியில் உதயநகர் மேற்கு கிராமத்திலசுமார் இருபத்தாறு இலட்சம் ரூபாசெலவில் அமைக்கப்படவுள்ள பொதுநோக்கு மண்டபத்திற்கான நிர்மாணப் பணியினையும் அடிக்கல்லையும் நாட்டி ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வுகளில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் கிருஸ்ணசாமி, கரைச்சி பிரதேச உதவி பிரதேசசெயலர் சிவகாமி, கரைச்சி பிரதேசசெயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அமலராஜ் மற்றும் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு அலுவலர்கள், குறித்த கிராமங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திசங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் முன்பள்ளிசிறார்கள் அவர்களின் பெற்றார்கள் எனபலரும் கலந்து கொண்டனர்.

## இளைஞர் கழக புனரமைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகத்தின் புனரமைப்பு இடம்பெறவுள்ளது. இதன் மூலம் 2014 நடப்பாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இக் கூட்டம் நாளை மாலை 5 மணியளவில் பிப்பிலி வீதியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையக்கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

ஜே/140 கிராம சேவகர் பிரிவினைச் சேர்ந்த 13 வயது முதல் 29 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

## மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் - உயிலங்குளம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று மதியம் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோட்டக்கல்விப்பணிப்பாளர் க.செல்வரத்தினம், சிறப்ப விருந்தினராக கிராம அலுவர் க.தேவதாஸ், பொலிஸ் அதிகாரி தசநாயக்கா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (140)

# புதிய ஊழியர் சங்கம்; யாழ்.பல்கலையில் தெரிவு



யாழ்ப்பாண பல்கலைக்கழக புதிய ஊழியர் சங்கம் நேற்று முன்தினம் அமைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் எம்.சசிகரன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் புதிதாக ஊழியர் சங்கத்தை ஆரம்பித்துள்ளனர். இதில் தலைவராக எம்.சசிகரன், செயலாளராக பி.கஜந்தன், பொருளாளராக ராகறெமில்டனி, உபசெயலாளராக ஆர்.அகிலன், உபபொருளாளராக எம்.மகிரன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வசதிக்குறைவுகளுடன் வட்டக்கச்சி பொது நூலகம்

## நிவர்த்தி செய்யுமா கரைச்சி பிரதேசசபை?

வட்டக்கச்சி பொதுநூலகம் பலவித வசதிக்குறைவுகளுடன் நிறைவான சேவைகளை வழங்க முடியாத நிலையிலுள்ளதாகஇப்பகுதி வாசகர்கள் குறைப்படுகின்றனர்.

வட்டக்கச்சி பொதுநூலகம் நிரந்தரக் கட்டட வசதியின்றி நீண்டகாலமாகவே தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது. தற்போதுள்ள கட்டடத்திற்கு ஒழுங்கான கதவு காணப்படவில்லை.

கல்மடுநகர், இராமநாதபுரம், மாவடியம்மன், மாயவனூர், வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் மாணவர்களும் பொதுமக்களும் பயன்படுத்தும் வட்டக்கச்சி பொது நூலகம் நிரந்தரமாக நல்ல முறையிலான கட்டடத்தைக் கொண்டிருக்க வேண்டுமென கரைச்சி பிரதேச சபைக்கு வாசகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (90)

## காணிகள் வழங்கப்படவில்லை

யாழ்.ஹதீஜா மகளிர் கல்லூரியில் தங்கியிருக்கும் அகதிக்கும் பங்களுக்க எவராலும் எந்தக்காணியும் வழங்கப்படவில்லை என யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனச் செயலாளர் ஆர்.கே.எம். சுவர்ஹான் தெரிவித்துள்ளார். (105)

சிறுவிளம்பரம்

விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள சீற் கூரையுடனான வீட்டின் அத்திபாரம் (33x29) முதல் கூரை வரையிலான சகல பாகங்களும் அடங்கலாக வீடு விற்பனைக்குண்டு.
தொ.பே : 0773159747 (C/3401)

सत्यमेव जयते

CONSULATE GENERAL OF INDIA
JAFFNA

INVITATION FOR 64th ANNIVERSARY OF INDIA'S REPUBLIC DAY IN JAFFNA

Consul General of India, Jaffna shall be holding a Flag Hoisting ceremony on the occasion of 64th Anniversary of India's Republic Day at the Consulate General of India, Jaffna's premises at 14, Maruthady Lane, Nallur, Jaffna between 9.00 AM to 10.00 AM on Sunday, 26th January 2014. Indian National flag will be unfurled at 9.00 A.M.

All Indian nationals are welcome to attend. Only Indian nationals holding some identity document shall be allowed entry into the premises.

(C/3324)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2498 திகதி 22-01-2014

ஆங்கில எழுத்து: T

வெற்றி எண்கள்: 23 29 48 58

போனஸ் இல: 08

ஜக்பொட் பரிசு ரூ.11,647,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 254041 | 20/- | 5,080,820/- |
| 2 இல | 18186 | 100/- | 1,818,600/- |
| 3 இல | 379 | 1,000/- | 379,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10080 | 40/- | 403,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 683 | 1,000/- | 683,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,647,350/- | - |
| 1 இல + போனஸ் இல | 12169 | 100/- | 1,216,900/- |
| 2 இல + போனஸ் இல | 576 | 500/- | 288,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 491 | 200/- | 98,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 296642 | | 12,499,220/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.01.25 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 12,340,825/-

அபிவிருத்தி லொத்தர் சபை
தொ.பே: 2333546/7
(C/3266)

# கலையை வளர்க்கும் மன்றசெயற்பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும்

## வல்வெட்டித்துறை கலை இலக்கிய மன்றத்தலைவர்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கலை இலக்கிய மன்றம் பாரம்பரிய கலை பண்பாடு சார் விழுமியங்களை பேணிப் பாதுகாத்து வருவதுடன் கலைகளை மேம்படுத்தும் செயற்பாட்டையும் மேற்கொண்டுவரும் நிலையில் அதற்கு பாராட்டுத் தெரிவிப்பதை விடுத்து அச்செயற்பாட்டிற்கு பங்கம் விளைவிக்கும் சிலரது முயற்சி கண்டிக்கத்தக்கதாகும் என மன்றத்தின் தலைவர் ர.மகிந்தன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் 4ஆவது மாபெரும் கலை இலக்கிய பெருவிழா புதுவருடதினத்தில் நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெற்றது. இதில் தலைமை உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றம் என்ற நற்பெயரோடு 5 இளம் உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பமாகி இன்று 4ஆவது ஆண்டை அடைந்துள்ளது. தற்போது 45 இளைஞர்கள் மன்றத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இதற்கு வல்வை மக்கள், ஆர்வலர்கள், புலம் பெயர் வல்வையர்கள் என அனைவரினதும் பங்களிப்பும் ஆதரவும் தனக்கென பல கொள்கைகளையும் வரையறைகளையும் கொண்டு பல செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. அந்த வகையில் கலை கலாசாரம், இலக்கியம் என்ற ரீதியில் கலையை வளர்ப்பதற்கு கலைஞர்களை கௌரவித்து கலைப் போட்டிகளையும் மாணவர்கள் மத்தியில் நடாத்தி அவர்களையும் ஊட்டி வளர்த்து தன்னையும் வளர்த்து வருகின்றது.

நெறிதவறாது செயற்படும் மன்றத்தின் செயற்பாட்டை விரிவாக்குவதற்கு ஒத்துழைப்பு நல்கி வரும் வல்வை மக்கள், கலைஞர்கள் புலம் பெயர் வல்வையர்களின் சரீரப்பங்களிப்பில் தொடர்ந்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மன்றத்திற்கென தனியான இடம் தேவையாகவுள்ளது.

மேலும் பிரிட்டிஸ் கவுன்சில் நிறுவனம் தனது ஒத்துழைப்பின் கீழ் நிதிப்பங்களிப்பை வழங்குவதாக கேட்டுள்ள நிலையில் வல்வெட்டித்துறை இளைஞர்களின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட மன்றத்தை விலை போக அனுமதிக்கப்போவதில்லை. தொடர்ந்து நாம் இம் மன்றத்தின் செயற்பாட்டை நல்ல முறையில் செயற்படுத்துவோம் என நம்பிக்கையுள்ளது என்றார். (116)

# நமசிவாய பிரார்த்தனை பவனி கீரிமலைநோக்கி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் நடாத்தும் மாபெரும் ஓம் நமசிவாய பிரார்த்தனை வாகன பவனி கோலாகலமாக இன்று இடம்பெறுகின்றது.

பீடாதிபதி ஜம்பு மகேஸ்வர சிவாச்சாரியாரின் ஆசிகளுடனும், அனைத்து இந்து மத குருமார்களது நல்லாசிகளுடனும் வண்ணை வைதீஸ்வரர் ஆலயத்திலிருந்து மு.ப 11 மணிக்கு ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீசபா வாசுதேவக் குருக்கள் தலைமையில் பவனி ஆரம்பமாகின்றது.

இந்த வாகன பவனி காங்கேசன்துறை வீதி வழியாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

இவ்வாகன பவனியை வரவேற்கும் வகையில் காங்கேசன்துறை வீதியில் வசிக்கும் மக்கள் தங்கள் இல்லங்களின் வாயில்களிலும் வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் ஆலயங்கள் என்பவற்றில் அலங்காரம் செய்து பூரண கும்பம் வைத்து பிரார்த்திக்குமாறும் இப் பவனியில் அனைத்து வைச மக்களும் கலாசார உடைகள் அணிந்து பிரர்த்தனையில் ஈடுபடுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (இ)

# தேசிய உற்பத்தித்திறன் விருது தெளிவுபடுத்தும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய உற்பத்தித் திறன் விருது (2012 - 2013) வழங்கல் தொடர்பான தெளிவுபடுத்தும் கருத்தரங்கு எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்திலும் 29ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும், 30ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும், 31ஆம் திகதி யாழ் மாவட்ட செயலகத்திலும் இடம்பெறவுள்ளன.

பாடசாலைகள், அரச மற்றும் உற்பத்தி மற்றும் சேவையாளர்கள் இதில் பங்குபற்றலாம். பாடசாலைப் பிரிவு காலை 8.30 - 10.30 வரைக்கும், அரச பிரிவு முற்பகல் 11.00 - 1.00 மணி வரைக்கும் உற்பத்தி மற்றும் சேவைப்பிரிவு பி.ப. 1.30 - 4.00 மணி வரையும் நடைபெறும்.

விருதுக்குரிய விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள 50 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 12×10 அளவுடைய முகவரி எழுதப்பட்ட கடித உறையினை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

தேசிய உற்பத்தித்திறன் செயலகம், 10 ஆவது மாடி, செத்சிறிபாய, 2ஆவது கட்டடம், பத்தரமுல்லை என்ற முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்களை WWW.Productiviymiv.gov.lk என்ற இணைய முகவரியில் பார்வையிடலாம். (105)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் வளர்ப்பு மாடுகளுக்கான பட்டிப்பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றபோது மாடுகளுக்கு படையல் வைத்து பூஜை இடம்பெறுவதைக் காணலாம். (30)

# இளையர் கொந்தளிப்பில் தீயை மூட்டாதீர்கள்!




வேலையில்லாப் பிரச்சினை
மீண்டும் பெரும் பிரச்சினையாக
உருவாகி வருகிறது.
படித்தவர்களுக்கும்
வேலையில்லை.
படிக்காதவர்களுக்கும்
வேலையில்லை என்ற நிலை
உருவாகியுள்ளது.

இந்தப் பிரச்சினை இப்படியே நீடித்தால் அது நாட்டை மீண்டும் கொந்தளிப்பான நிலைமைக்குக் கொண்டு போகும்.

இலங்கையின் கடந்த கால வரலாறு இதற்குச் சாட்சி.

வேலையில்லாப் பிரச்சினையினால் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றவர்கள், இளைஞர்களே. அவர்களுடைய எதிர்காலமே முதலில் கேள்விக்குள்ளாகிறது.

எனவே அவர்கள் அரசாங்கத்தின் மீது கோபமடைகிறார்கள். அந்தக் கோபம் அவர்களை அரசுக்கு எதிராகத் திரள வைக்கிறது.

இலங்கையில் நடந்த ஆயுதப்போராட்டங்கள் – கிளர்ச்சிகளின் அடிப்பகுதியை ஆராய்ந்தால் இந்த உண்மை புரியும்.

இந்தப் போராட்டங்களை ஆயுதரீதியாக அடக்கியிருக்கலாம். ஆனால், அது தீர்வல்ல.

அது தீர்வாக இருந்திருந்தால் இன்று மீண்டும் வேலையில்லாப் பிரச்சினை உருவாகியிருக்காது.

இடைக்காலத்தில் யுத்தம் பல இளைஞர்களுக்கு தற்காலிகமான வேலை வாய்ப்பினை வழங்கியிருந்தது.

அதாவது, யுத்தத்துக்கான படைத்தேவைக்காக பல ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான இளைஞர்கள் படைத்துறைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

மறுபக்கத்தில் இதே காலப்பகுதியில் போராட்டங்களில் ஈடுபட்டதனால், அதிலும் கணிசமான அளவு இளைஞர்களின் புலன் வேறு நிலைகளில் இருந்தது.

ஆனால், இன்று நிலைமை வேறு.

இப்பொழுது யுத்தம் முடிந்து விட்டது. எனவே புதிய ஒரு காலத்துக்காக எதிர்பார்ப்போடு இளைஞர்கள் காத்திருக்கிறார்கள். பல தேவைகள் அவர்களின் முன்னே உள்ளன.

ஆனால், இதை நிறைவேற்றக்கூடிய நிலையில் நாடும் இல்லை. அரசாங்கத்தின் திட்டங்களும் இல்லை.

தற்போது நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை செய்கிறார்கள் என்று சிலர் வாதிடலாம்.

இது மிகக்குறுகிய கால வேலை வாய்ப்பையே வழங்குகிறது. மற்றும் படி நிலையானதோ உத்தரவாதமுடையதோ அல்ல.

உதாரணமாக வீதிகளை புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகளில் வேலையில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதைப்போலவே கட்டட நிர்மாணப்பணி, துறைமுக அபிவிருத்திப்பணி, மின் விநியோகப்பணி என அபிவிருத்தித்திட்டங்களுடன் தொடர்பான பணிகளில் ஈடுபட்டவர்கள் குறித்த கால எல்லையுடன் வேலையற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவர்களுடைய நாளைகள் எப்படி இருக்கப்போகின்றன?

இதுவே இப்போதுள்ள கேள்வி.

உண்மையில் இதற்கான தீர்வென்பதை நாட்டை உற்பத்தி மயப்படுத்துவதன் மூலமாகவே எட்ட முடியும்.

ஆனால், 1977 இல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முழு அளவிலான திறந்த பொருளாதாரக் கொள்கை நாட்டின் உற்பத்தித்திறனை மழுங்கடித்து விட்டது.

இதனால் கொழுத்தவர்கள் அரசியல் அதிகாரத்திலிருப்போரும் பெரும் முதலாளிகளுமே தவிர, நாட்டு மக்கள் அல்ல.

இதனை விளங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் மக்களுக்கு அறிவும் இல்லை.

திறந்த பொருளாதாரக் கொள்கை இன்று ஒரு உலக நடைமுறை எனச் சிலர் வாதிடக்கூடும்.

இருக்கலாம். ஆனால், அதை வரையறையுடன், நாட்டின் நன்மை, நாட்டின் எதிர்காலம் ஆகியவை குறித்த தூர நோக்கோடும் தீர்மானங்களோடும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

இப்பொழுதும் இதை உருவாக்கலாம். அப்படி மறுசீர்ப்படுத்தி உத்தரவாதப்படுத்தவே வேண்டும்.

இல்லையென்றால், நாடு கையேந்திகளின் தேசமாகி விடும்.

நாட்டை விற்று, நாட்டின் நலன்களை விற்று வயிற்றை வளர்ப்போரே அரசாண்டார் என்று வரலாறு ஆகிவிடும்.

எல்லாவற்றிலும் முக்கியமானது, இளைஞர்களின் கொந்தளிப்பில் தீயை மூட்டாதிருக்க வேண்டும். அவர்களின் நெஞ்சில் தீ மூளுமாக இருந்தால் அது எல்லாவற்றையும் எரித்து விடும்.

உடமையில் உரிமை கோருவது அல்ல அன்பு, உன்னையே காணிக்கையாகத் தருவதுதான் அன்பு கொள்வதன் பொருள் - ஸ்ரீஅன்னை

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எல்லோர்க்கும் எல்லாமும்!

ஒக்ஸ்ஃபாம் (Oxfam) அமைப்பு சமீபத்தில் நடத்திய ஆய்வொன்றிலிருந்து, உலகில் உள்ள ஒட்டுமொத்த செல்வத்தில் பாதியளவு 85 பெரும் பணக்காரர்கள் வசம் உள்ளதாக தெரிய வந்துள்ளது. எஞ்சியுள்ள பாதி வளமே உலக மக்களிடம் பரவியுள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் பணக்காரர்கள் அரசியல் அதிகாரத்தின் துணையோடு பொருளாதார விளையாட்டை விளையாடுவதாகவும், ஏழைகள் பணக்காரர்கள் இடையிலான இடைவெளியானது வளர்ச்சியடைந்த நாடுகள் மட்டுமின்றி வளரும் நாடுகளிலும் அதிகரித்து வருவதாகவும் அது தெரிவிக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளில் ஒரு சில பணக்காரர்களிடம் மட்டுமே பணம் குவிந்ததாகவும் அதிலும் ஒரு சதவீத குடும்பங்களிடம் 46 சதவீத வளம் குவிந்திருப்பதாகவும் அந்த ஆய்வு மேலும் தெரிவித்துள்ளது.

பொதுவுடமைத் தத்துவம் அறிமுகமாகி ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் கடந்துவிட்ட பின்னும் இவ்வுலகில் பலர் வாடச் சிலர் வாழும் நிலையே மேலோங்கி வருவது வருத்தத்திற்குரியது. ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமுதாயம் என்பது நேற்றைய கனவல்ல. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி நடைபெற்றிருக்கும் இன்று அது முற்றிலும் சாத்தியமாகக் கூடியதுதான் என்றே பலரும் கணிக்கிறார்கள்.

வளர்ச்சியின் பயனை உலக மக்கள் அனைவரையும் அடையச் செய்வதன் மூலமே அது நடைபெறும். ஏகபோக முதலாளிகளுக்குத் தங்குதடையற்ற சுதந்திரம் தரப்படும் ஏகாதிபத்திய முற்றுகைகளிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ளத் திரள்வதிலிருந்துதான் இது சாத்தியப்படும் என்றும் சொல்கிறார்கள்.

சிலரிடம் செல்வம் குவியவும், பலர் வறுமையின் வதைபாடுகளுடன் ஏங்கிக் கொண்டிருக்கவுமே வாழ்க்கை என்றிருக்கும் இந்த சமூகச் சூழ்நிலை மாறவேண்டும். அனைவரும் சமநிலையில் உள்ள சமூகம் என்பதுதானே மானுடத்தின் நீதியும் உன்னதமுமாக இருக்க முடியும்?

நாம் சாப்பிடுவதென்பது, உலகில் எங்கெங்கோ பல்லாயிரம் பேர் பட்டினியால் செத்துக் கொண்டிருப்பவர்களின் உணவைத் திருடியதாகத்தானே இருக்கிறது? நாங்கள் நாளுக்கொன்றாக உடுத்தும் ஆடைகள் கூட, உடுதுணி வாங்க முடியாத, குளிருக்குப் போர்த்திக்கொள்ளத் துண்டில்லாத பல்லாயிரம் மனிதர்கள் இருக்க, நாம் அணிந்துகொள்வதாகத்தானே இருக்கிறது?

நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதுகூட, எங்கெங்கோ பலர் வறுமையாலும் வன்முறையாலும், வாழ்வதற்கு முடியாமல் செத்துக் கொண்டிருக்க நாம் இருப்பதாகத்தானே இருக்கிறது? இப்படியான இந்த சமூக அமைப்பில் என்ன நியாயம் இருக்கிறது?

ஆக, இந்த சமூகம், கலாசாரம், ஆட்சி, நாம், நமது வாழ்க்கைமுறை எதுவும் இங்கு சரியாக இல்லை என்பதிலிருந்துதான் நாம் தொடங்க வேண்டியிருக்கிறது. இன்றிருக்கும் இந்தச் சமூக அமைப்புமுறை, ஒழுக்கவிதிகள், !பழக்கவழக்கங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நாம் நடக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் இந்த அமைப்பின் தர்மமாக ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும்தான் தொடர்ச்சியாக இருக்கிறதெனில் நாம் என்ன செய்வது?

உலகநியதி இது; நாம் நம் பாட்டைப் பார்த்துப் போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான் – என்ற குற்றமற்ற மனோநிலையை எவ்வாறு உருவாக்கிக் கொண்டோம்? சமமற்ற மனிதர்களாகவே வாழ்வதில் எவ்வாறு சமாதானமடைந்து கொண்டோம்?

இங்கே எல்லாம் சரியாக இருக்கிறது; நாம் சரியாக இருக்கிறோம்; சரியான முறைப்படிதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அடித்துச் சொல்ல முற்படுகிறவர்கள் குறித்து சந்தேகம் கொள்ள வேண்டியதே முதல்படி. - ஆசிரியர்.

# நாட்டில் உள்ள பிரச்சினையை நாமே பேசித்தீர்க்க வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிற்குள் இருக்கின்ற பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும். வெளிநாட்டுக்குச் சென்று தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது. நமது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்துக்கு யாராவது குந்தகம் செய்வதற்கு முனைந்தால் அது தாய் நாட்டுக்குச் செய்யும் பெரிய துரோகமாகும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் மதத் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கம் கடந்த 4 வருட குறுகிய காலத்துக்குள் யுத்தத்தை முடித்து வடமாகாணத்தில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை குடியமர்த்தி, புனர்வாழ்வளித்து அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளது.

பல இராணுவ முகாம்கள் இன்று அகற்றப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்கள் எந்தவொரு கெடுபிடியுமின்றி சுதந்திரமாக எங்கும் சென்று வரக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த தேர்தல்களை பார்க்கும் போது வடமாகாண மக்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 5 வீதமும், பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் 12 வீதமும், அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 45 வீதமும், கடைசியாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் 72 வீதமும் வாக்களித்துள்ளனர். இவ்வாறு அச்சமின்றி வாக்களிக்கின்ற சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் ஒன்றின் போது உயிரிழப்புக்களும், பொருளாதார இழப்புக்களும் ஏற்படுவது சாதாரணமாகும். எனினும் இந்த நாடு குறுகிய காலத்திற்குள் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பல தியாகங்களுக்கு மத்தியில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானத்தை நாம் நிலையான சமாதானமாக நிலைபெறச் செய்ய வேண்டும்.

சமாதானத்திற்கு அநீதி இழைக்க முற்படுவதானது பாரதூரமான குற்றமாகும் 30 வருட கால யுத்தத்திற்கு பின்பு இந்த நாட்டில் வீதி அபிவிருத்தி, மின்சார அபிவிருத்தி, என பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் அனைவரும் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைக்கு அமைவாக சுபீட்சமாக வாழ்கின்றனர். அண்மையில் என்னை சந்தித்த அமெரிக்க பிரஜையொருவர் நாட்டை எவ்வாறு கொண்டு செல்கிறீர்கள் என என்னிடம் கேட்டபோது எங்களுக்கு புத்தி செல்லத்தேவையில்லை, எங்களது நாட்டில் புத்திஜீவிகள் இருக்கின்றனர். எங்களது பிரச்சினைகளை நாங்கள் தீர்த்துக்கொள்வோம் எனக் கூறினேன்.

45 வருட அரசியல் அனுபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குண்டு. அதே போன்று ராஜபக்ஷ குடும்பத்திற்கு 75 வருட அரசியல் ஈடுபாடு உண்டு என்றார்.

# ஜி - 77 நாடுகள் குழுவின் தலைமைப் பதவி இலங்கைக்கு

(கொழும்பு)

ஜி-77 நாடுகள் குழுவின் வியன்னா அலுவலகத்தின் 2014ஆம் ஆண்டுக்கான தலைமை பதவி இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இதனையடுத்து புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள வியன்னாவிலுள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதியான ஏ.எல்.ஏ.அஸீஸ் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தப் பதவிக்கு தான் தெரிவானதையிட்டு இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடையும் என ஏ.எல்.ஏ.அஸீஸ் இதன்போது தெரிவித்தார்.

இவருக்கு முன்னர் வியன்னாவிற்கான சூடானின் நிரந்தர பிரதிநிதி மஃமூத் எலாமின் இந்தக் குழுவின் தலைவராக பதவி வகித்தார். இந்தக் குழு 1964ஆம் ஆண்டு 77 நாடுகளைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தில் நிதிப்படுத்தப்படும் இந்தக் குழுவின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்பாடுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கியதேசியக் கட்சிக்கு தாவியவர் தொகுதி அமைப்பாளராக நியமனம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் ஆனந்த பத்மசிறி காரியவசம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கட்சியின் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்ட அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பத்தேகம தொகுதியின் அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் அவர் உரையாற்றுகையில் நாடு அதளபாதாளத்தில் விழுந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே நாட்டை அதில் இருந்து மீட்க முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ஒன்று தற்போது இல்லை. ஜனாதிபதி மற்றும் அவரை சூழ்ந்திருக்கும் ஒரு சிலரே இன்றைய சுதந்திரக் கட்சியினர்.

ஜனாதிபதி அன்று கட்சியினால் புறந்தள்ளப்பட்டு வந்த போது தெற்கில் தேர்தல் கூட்டங்களை கூட நடத்த அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அன்றைய காலகட்டத்தில் நானும நோயேல் காரியவசமும் அனுசரணைகளை வழங்கி கூட்டங்களை நடத்த ஏற்பாடுகளை செய்து கொடுத்தோம்.

ஜனாதிபதியை அன்று கட்சியில் இருந்து ஓரங்கட்டியவர்கள் தற்பொழுது அவருக்கு மிகவும் நெருக்கமானவர்களாக உள்ளனர். கட்சிக்காக உழைத்தவர்கள் கைவிடப்பட்டுள்ளனர் என்றார்.

# ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் சீன விஞ்ஞானக்கல்லூரியுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் சீன விஞ்ஞான கல்லூரிக்கான பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்று கைச்சாத்திடப்பட்டது.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் வைத்திய கலாநிதி என்.எல்.ஏ.கருணாரத்ன மற்றும் சீன விஞ்ஞான கல்லூரிக்கான பல்கலைக்கழக பிரதித் தலைவர் சு.சியாங்பினுக்கிடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி இந்த இரு நிறுவனங்களுக்கு இடையிலான, கல்விசார், இணைந்த ஆராய்ச்சி முயற்சிகளின் ஆரம்பமாக யூ.சி.ஏ.எஸ் முதுமாணிக் கற்கை நெறி புலமைப்பரிசில் மூலமாக மாணவர்கள் தமது முதுமாணிப் பட்டப்படிப்பை யூ.சி.ஏ.எஸ் அல்லது சீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அல்லது சீனாவில் உள்ள ஏனைய யூ.சி.ஏ.எஸ் கல்வி நிலையங்களில் தொடரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**எங்களது பதின்ம வயதுகளில் வட்டார 'நட்டாமுட்டிகள்' குழுவிற்கு ரத்தினம்தான் தலைவன். சுவர்களில் தமிழீழ முழக்கங்களை எழுதுவது, கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை வரைவது, பாடசாலைப் பகிஸ்கரிப்புப் போராட்ட நாட்களில் காலையிலேயே கல்லும் கையுமாக நிற்பது, சுயதயாரிப்பில் வெடிகுண்டுகளைச் செய்து ந டுநிசியில் வெடிக்க வைத்துச் சனங்களைக் குழப்பிவிடுவது என்பவற்றோடு அந்த வயதுக்குரிய எல்லாக் குழப்படிகளையும் செய்துகொண்டு இருபத்துநான்கு மணி நேரமும் நாங்கள் பிஸியாக இருந்த காலமது.**




# அம்முக்குட்டியின் முகப்புத்தகம்

**ஷோபா சக்தி**

அம்முக்குட்டி என்ற வித்யாவிடமிருந்து இரு வருடங்களிற்கு முன்பு எனக்கு முகநூல் நட்பு அழைப்பு வந்தபோது, அம்முக்குட்டியின் முகநூல் பக்கத்தில் கவிஞர், ஓவியர், /போட்டோகிராபர், பாடகர் எனச் சுய விபரங்கள் இருந்தன. அம்முக்குட்டி யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவு மாணவி என்ற குறிப்புமிருந்தது. நான் அம்முக்குட்டியின் அழைப்பை ஏற்றுக் கொண்டேன். சில மாதங்களிற்குப் பின்பு "அல்லையூர் இணையத்தளம்" சிவாவிடம் பேசிக்கொண்டிருந்தபோது, நண்பன் ரத்தினம் குறித்த பேச்சுவந்தது. ரத்தினத்தின் மகளே அம்முக்குட்டி எனத் தெரியவந்தது.

ரத்தினம் என்னிலும் நான்கு வயதுகள் மூத்தவன். கிராமத்தில் எங்களுடைய குடிசை வீடுகள் அருகருகாக இருந்தன. ரத்தினத்திற்கும் எனக்கும் எப்போது நட்புத் தொடங்கியது எனக் காலத்தைக் குறித்துச் சொல்ல இயலவில்லை. பிறந்ததிலிருந்தே நட்பு என்றுதான் சொல்ல வேண்டும். ரத்தினத்தை ஒருநாள் பார்க்காவிட்டாலும் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.

ரத்தினம் படிப்பில் மகா கெட்டிக்காரன். திறமையான விளையாட்டுவீரன். சினிமா, நாடகம் என்றால் அவனுக்குக் கிறுக்கு. சினி மாப் பாடல்களை அருமையாகப் பாடுவான். வேட்டைக்காரன். நீச்சல்காரன். கிராமத்திற்குள் ஏதாவது பிரச்சினையென்றால் கம்பும் கையு மாக முன்னுக்கு நிற்பான். இதுபோதாதா அவனைச் சிநேகிக்க.

1983 யூலை வன்செயல்கள் சிறுவர்களான எங்களை ஒரேநாளில் வளர்ந்தவர்களாக்கிவிட்டன. சிறுவயதுக் குழப்படிகள் காணாமாற்போய் இரகசியங் களும் இலட்சியங்களும் உள்ள மனிதர்களாக மாறிவிட்டோம். எனக்குப் புலிகள் இயக்கத் தோடு தொடர்பு கிடைத்தது. ரத்தினத்துக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தோடு தொடர்பு. ஆனால் ஒருவருக்கு மற்றவருடைய தொடர்பு தெரியாது. எனக்கு ரத்தினத்தையும் புலிகளோடு இணைக்க உள்ளுக்குள் விருப்பமிருந்தது. அவனுக்கும் என்னைக் கழகத்தோடு இணைக்க விருப்பமிருந்ததாகப் பிறகொருநாள் சொன்னான். ரத்தினத்தோடு இது குறித்துப் பேசுவதற்குத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென ஒருநாள் அவன் காணாமற்போனான்.

இரண்டு வருடங்களிற்குப் பின்புதான் நாங்கள் திரும்பவும் சந்தித்தோம். ஒன்றுக்கொன்று வரலாற்றுப் பகைகொண்ட இரண்டு முரட்டு இயக்கங்களின் போராளி களாக இடுப்புகளில் மறைக்கப்பட்டிருந்த ஆயுதங்களோடு சந்தித்துக்கொண்டோம். இருவருமே. இயக்கங்களிலிருந்து வெளி யேறும் காலமும் வந்தது. மறுபடியும் சாரைப்பாம்புகள் போல ஒருவரையொருவர் பின்னிக்கொண்டோம். ரத்தினத்திற்கு அரசியல் ஈடுபாடு இல்லாமலேயே போய் விட்டது. அவன் காதலித்துத் திருமணம் செய்துகொண்டான். ஒரு பெண்குழந்தையும் பிறந்தது. இந்திய அமைதிப் படைக் காலத்தில் நான் நாட்டைவிட்டு வெளியேறி யதன் பின்பாக, 1990இல் அம்முக்குட்டி பிறந்தாள். வெளிநாடு வந்ததன் பின்பாக ரத்தினத்துக்கு ஒரு கடிதம் போட்டேன். அவனிடமிருந்து பதில் வரவில்லை. யுத்தத்தால் அவன் குடும்பத்தோடு ஊர் ஊராக ஓடிக்கொண்டிருந்தான். எனது கடிதம் அவனுக்குக் கிடைத்திருக்காது என நினைத்துக்கொண்டேன். பின்பு ரத்தினத்திற்கு எங்களது கிராமத்தின் "கிராம சேவையாளர்" வேலை கிடைத்தது. ஊரிலிருந்து பிரான்ஸ் வருபவர்களிடம் அவ்வப்போது அவன் குறித்து விசாரித்துக்கொள்வேன்.

ரத்தினத்தின் இரண்டாவது மகள்தான் அம்முக்குட்டி என நான் அறிந்ததும் நான் அவளுக்கு முகப்புத்தகத்தில் ஒரு "மெசேஜ்" அனுப்பினேன். அதற்கு உடனடியாக அவள் பதில் அனுப்பினாள்.

அம்முக்குட்டியுடன் நான் பரிமாறிக்கொண்ட மெசேஜ்களை இன்று வரிவரியாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். எங்களது உரையாடல்களை இங்கே இறக்கி வைத்துவிட மனது அடித்துக் கொள்கிறது. 20ஆம் திகதி டிசம்பர் 2012இல் நான் அவளுக்கு முதல் "மெசேஜ்" அனுப்பினேன்.

**நான்:** மகள்! நான் ஷோபாசக்தி என்ற அன்ரனி. உங்கள் அப்பாவின் பால்ய கால சிநேகிதன். நீங்கள் பல்கலைக்கழகத்தில் கற்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. உங்கள் அப்பா அந்தக் காலத்தில் அல்லைப்பிட்டிக்குள்ளேயே படிப்பில் பெரிய கெட்டிக்காரன். நீங்களும் அப்படித்தான் இருப்பீர்கள். அப்பாவையும் அம்மாவையும் அக்காவையும் (அவர் பெயர் சிந்து என ஞாபகம்) கேட்டதாகச் சொல்லுங்கள்.

**அம்மு:** என்னால் நம்ப முடியவில்லை... நன்றி நன்றி.. அப்பா தங்களை பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார். தங்களை தொடர்புகொள்ள முடியவில்லை. மிக்க மகிழ்ச்சி... தாங்கள் நலமா? நாங்கள் இங்கு நலமாக இருக்கிறோம். அம்மா தான் அடிக்கடி தங்களை பற்றிக் கூறிக்கொண்டே இருப்பார்..சிந்து அக்கா வாய் பேச முடியாதவர். இப்போது 25 வயது.

**நான்:** நான் ஊர் திரும்பும் காலம் விரைவில் வரட்டும். எல்லோரும் நேரில் சந்திப்போம்.

* * *

**நான்:** உங்களது ஓவியங்களை எல்லாம் ரசித்தேன். வாழ்த்துகள். அந்தக் காலத்தில் உங்கள் அப்பா வீடியோ படம் ஓட விளம்பர சுவரொட்டி தயாரித்தபோது அதற்கு நான் ஓவியங்கள் வரைந்திருந்தேன்.



**அம்மு:** அட..நான் சாதாரணமாகத்தான் வரைந்திருக்கிறேன்.

**நான்:** இப்போது எங்கேயிருக்கிறீர்கள்? வீட்டிலா? அப்பா அருகிலுண்டா?

**அம்மு:** அப்பா குளித்துக்கொண்டிருக்கிறார்

**நான்:** எனக்குத் தெரிஞ்சு உங்கிட அப்பா கடலில மட்டும்தான் குளிப்பார்.

**அம்மு:** ஈஈஈஈஈஈஈஈஈஈ... எங்கிட வீட்டில கடலில்லை

**நான்:** இண்டைக்கு ஞாயிறுதானே விதானையா ருடன் போன் பேசலாமா?

**அம்மு:** 15 நிமிடம்..

**நான்:** சரி..

**அம்மு:** இந்தியாவில் மாணவர்கள் எமக்காக போராடுவது பயன் உள்ளதா? இங்கே சற்று குரலை உயர்த்தி பேசினாலும் உள்ளே தூக்கி போடுகிறார்கள். அப்படி இருக்க எந்தத் துணிவில் எம்மால் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க முடியும்?

**நான்:** இந்திய மாணவர்கள் போராட்டம் பயனின்றிப் போகும்.

**அம்மு:** என்னுடைய கருத்தும் அதுவே. நன்றி.

* * *

**அம்மு:** ஹாய்..உங்களோட லெட்டர் ஒன்று கிடக்கு வீட்டில. நீங்க வெளிநாடு போய் அப்பாவுக்கு எழு-தின லெட்டர். பிறகு கொப்பி அனுப்புறேன்.

**நான்:** ஓ அப்படியா. மகிழ்ச்சி. நீங்கள் நலமா?

**அம்மு:** நலம்..எப்ப ஸ்ரீலங்கா வாறீங்க?

**நான்:** 2015

**அம்மு:** எனது பட்டமளிப்பு விழாவுக்கா..

**நான்:** ஆம்

**அம்மு:** தாங்க்ஸ்

* * *

**அம்மு:** ஹாய்.. நான் ஒரு கவிதைத் தொகுப்பு வெளியிட நினைக்கிறேன். முன்னுரை எழுதித் தர முடியுமா?

**நான்:** மகளே, நான் கவிஞனல்ல. அ.யேசுராசா, கருணாகரன், நிலாந்தன் போன்ற கவிஞர்களிடம் முன்னுரை பெறுவதே நல்லது.

**அம்மு:** எனக்கு தங்களிடம் வாங்க ஆசை

**நான்:** சரி, எழுதிக்கொடுக்கிறேன்.

* * *

இந்தக் கடைசி உரையாடல் 2013 யூன் 9ஆம் திகதி நடந்தது. அதற்குப் பின்பு உரையாடலில்லை.

இன்று காலையில் எழுத்தாளர் பொ. கருணாகர மூர்த்தியுடன் எனக்கொரு சந்திப்பு இருந்தது. அதற்காகக் காலையில் சீக்கிரமாக எழுந்து தயாராகிவிட்டு, வெளியே போவதற்கு முன்பாக ஒருதடவை அவசர அவசரமாக முகப்புத்தகத்தை மேய்ந்தேன். சேலைகட்டியிருந்த அம்முக்குட்டியின் அழகிய நிழற்படமொன்று அவளது பக்கத்தில் அப்போதுதான் பதிவேற்றப்பட்டிருந்தது. "மிக அழ காக இருக்கிறாய்" என்றொரு "கொமென்ட்" போட நினைத்தேன். ஏனோ போடவில்லை.


அடுத்த ஒருமணிநேரத்தில், கருணாகரமூர்த்தியைச் சந்திப்பதற்கு இடம் குறித்திருந்த "அறிவாலயம்" புத்தகக்கடைக்கு முன்னால் காத்திருந்தேன். அப்போது தெருவால் வந்த, எங்களது கிராமத்தைச் சேர்ந்த தம்பி நேசன் பதற்றத்தோடு என்னிடம் வந்து "அண்ணே அம்முக்குட்டி செத்துப் போச்சாம்" என்றான். அவனது கைத்தொலைபேசியில் ஊருக்கு ரத்தினத்திடம் தொடர்புகொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான். நான் அவனிடம் "இனி எதைப் பேசுவது?" என்று கேட்டேன். "ரத்தினத்திடம் நான் இங்கிருப்பதைச் சொல்லாதே" என்றேன். அவன் தலையசைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

வீட்டிற்குத் திரும்பிவந்து கணனி முன்பு உட்கார்ந்திருக்கின்றேன். அம்முவின் முகப்புத்தகப் பக்கத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவளது பக்கத்தில் கடந்த சிலமாதங்களாகவே தற்கொலை குறித்த குறிப்புகளும் கேள்விகளும் இருக்கின்றன. "நான் இறந்தால் எனக்கு யார் அஞ்சலி செலுத்துவீர்கள்?" எனக் கேட்டிருக்கிறாள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்த பிக்குகளின் போராட்டங்களை நாட்டுக்கு எதிராக பயன்படுத்த முயற்சி

## கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் போராட்டங்களை நாட்டுக்கு எதிரான பிரசாரங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு ஒன்றில் பங்கு கொண்ட அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பௌத்த பிக்குகளை நாட்டுக்கு எதிராக பயன்படுத்திக் கொள்ள முனைப்பு காட்டப்பட்டு வருகிறது.

இணையத்தின் ஊடாக இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சில தரப்பினர் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக பிரசாரம் செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பௌத்த பிக்குகளின் உரைகள், போராட்டங்கள், பேரணிகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை இலங்கை எதிர் பிரசாரங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

# மொத்த வருமானத்தில் பெரும் பகுதியை செல்வந்தர்களே அனுபவிக்கின்றனர்



நாட்டின் மொத்த வருமானத்தில் பெரும் பகுதியை செல்வந்தர்கள் அனுபவிக்கின்றனர். இதனால் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளி பாரியளவில் அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வலஸ்முல்ல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி அமைச்சர்களான ராஜித சேனாரட்ன மற்றும் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊழல்களில் ஈடுபடுவதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

பாலியல் குற்றவாளிகள், சிறுவர் துஷ்பிரயோககாரர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், திரைசேரியை ஏமாற்றுவோர் போன்றவர்களே ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கின்றனர் என்றார்.

# பொலிஸ் நிர்வாகத்தில் அரசியல்வாதிகள் தலையீடு செய்ய முடியாது

(கொழும்பு)

அரசியல்வாதிகள் பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் தலையீடு செய்ய முடியாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் மோசடிகளில் பொலிஸார் ஈடுபடுவதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கள் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் அதிகளவு ஊழல் மோசடிகள் இடம்பெறும் திணைக்களமாக பொலிஸ் திணைக்களத்தின் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2013 ஆம் ஆண்டு முழுவதிலும் 9 பொலிஸ் உத்தியோகத்தர்களை மட்டுமே லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர், சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.



# வெலிக்கடை மோதல் சதிக்கொலை ஆராய புதியகுழு நியமனம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் ஆராய்ந்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கென புதிய குழு ஒன்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மறறும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அவ் அமைச்சின் செயலாளர் எஸ்.விதானகே தெரிவித்துள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் சிறைக் கைதிகள் 27 பேர் உயிரிழந்தனர்.

இந்த மோதல் சம்பவம் குறித்து ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழு 17 புதிய பரிந்துரைகளை முன் வைத்தது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சிடம் தமது அறிக்கையை கையளித்தது.

நடைமுறைப்படுத்தக்கூடிய பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறே புதியகுழு அமைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி பரிந்துரைகளை துரித கதியில் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# திடீர் அனர்த்தங்களினால் வருடத்திற்கு 500 சிறுவர்கள் மரணம்

திடீர் அனர்த்தங்களின்போது வருடம் ஒன்றிற்கு 500 சிறுவர்கள் மரணமடைவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. திடீர் அனர்த்தங்களின்போது வருடம் ஒன்றிற்கு 18,000 சிறுவர்கள் வரை கை மற்றும் கால்கள் முறிவடையும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

திடீர் அனர்த்தங்கள் தொடர்பில் முற்கூட்டிய அவதானம் இன்மையே இவற்றிற்கான காரணம் ஆகும். இவ் அனர்த்தங்களின் போது நாட்டில் மூன்றிற்கு அதிகமானவை தவிர்த்துக் கொள்ளக்கூடிய அனர்த்தங்கள் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் ஆர்வம்

கொழும்பு பங்குச்சந்தையின் நடவடிக்கைகள் அண்மை நாட்களாக உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. அதிக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வம் இந்த அதிகரிப்புக்கு வழி செய்ததாக றொயிட்டர் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் சிங்கப்பூரில் முதலீட்டினை கவரும் வகையிலான வேலைத்திட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெருக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

எதிர்காலத்திலும் வெளிநாட்டு முதலீட்டு பெருக்கம் அதிகரிக்கவுள்ள நிலையில், சந்தையும் சாதகமான நிலையில் இயங்கும் என்று ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# மேற்குலகத்தின் தலையீட்டிற்கு வழி ஏற்படுத்தியது அரசாங்கமே!

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தை மீறியும் மக்களின் மனித உரிமைகளை மீறியும் நாட்டின் மீது மேற்குலக நாடுகள் தலையீடு செய்வதை இன்றைய அரசாங்கமே ஏற்படுத்தியதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கும், அரசாங்கத்திற்கும் எதிராக மக்கள் அணிதிரள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் யோசனை ஒன்று நிறைவேற்றப்படவுள்ளது.

இதற்கான காரணங்களையும் அது தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடுகளையும் தெரியப்படுத்த வேண்டியுள்ளது.

1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சோஸலிச முகாம்கள் வீழ்ச்சியடைந்தன. அதுவரை உலகம் இரண்டு சக்திகளாக பிரிந்து இருந்தன. சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச நாடுகள் ஒரு அணியாகவும் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகள் ஒரு அணியாகவும் இருந்து வந்தன. இதனால் உலக நாடுகளின் அரசியலில் மிக முக்கியமான அரசியல் சமநிலை காணப்பட்டது.

1990 ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாம் வீழ்ச்சியடைந்த பின்னர் அமெரிக்கா தலைமையிலான தனி முதலாளித்துவ முகாம் உருவானது.

அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார தேவைகளை கருதி அந்நாடு ஏனைய நாடுகள் மீது அழுத்தங்களை கொடுக்க ஆரம்பித்தது. போர் ஆக்கிரமிப்பாகவும் அதன் அழுத்தங்கள் இருந்தன.

அமெரிக்காவுக்கு அரசியல் மற்றும் பொருளாதார வழி முறைகள் இருக்கின்றன. கடந்த காலத்தில் நாட்டில் போர் நடைபெற்றபோதும் சமாதான பேச்சுவார்த்தை காலத்திலும் பல்வேறு பாதுகாப்பு உடன்படிக்கைகள் ஊடாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பிளேக் இடையிலான உடன்படிக்கையும் அப்படியான உடன்படிக்கைகளில் ஒன்றுதான். இந்த உடன்படிக்கை மூலமாக எந்த ஒரு போர் நடவடிக்கையின் போதும் அமெரிக்கா இலங்கையின் வான் பரப்பை பயன்படுத்த முடியும்.


இதனால் அமெரிக்காவுடன் சம்பந்தப்பட்ட எந்தப் போராக இருந்தாலும் அதில் இலங்கையும் பங்காளி. இப்படியான அரசியல் பாதுகாப்பு , பொருளாதார உடன்படிக்கைகள் மூலம் எமது நாட்டை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் சம்பந்தமாக இலங்கைக்கு எதிராக யோசனை கொண்டு வரப்படுகிறது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் அரசியல் தேவையே ஒழிந்துள்ளது.

இதற்கான எமது எதிர்ப்பையும் விமர்சனத்தையும் முன் வைத்துள்ளோம். சிலர் அமெரிக்காவின் இந்த அரசியல் தேவையை நிறைவேற்றும் வகையில் அமெரிக்காவிற்கு வழியை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை மறைக்க முயற்சித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் தேவை மற்றும் அதற்கான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தும் சூழலை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்தது என்றார்.

# பகலில் "ஹெட்லைட்" பரீட்சார்த்த நடவடிக்கை



(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முதல் மதிய வேளைகளில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது "ஹெட்லைட்டை" ஒளிர செய்யுமாறு பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மதிய வேளையில் ஹெட்லைட்டை ஒளிரச்செய்வதன் வித்துக்களை தவிர்த்துக்கொள்ள முடியுமென ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

பரீட்சார்த்தமாக முன்னெடுக்கும் இந்த நடவடிக்கை வெற்றியளித்தால், அதனை சட்டமாக்கி நாடு முழுவதும் முன்னெடுக்க எண்ணியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சமிக்ஞை கட்டமைப்புக்களுக்கு அருகிலும் முச்சந்திகளிலும் பயணிக்கும் போது வீதி சட்டங்களை மீறுகின்றவர்கள் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தவிர கனரக வாகன போக்குவரத்தின் போது வலது புறமாகவும் நடு வழித்தடங்களை பயன்படுத்துவோருக்கு கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

வாகன போக்குவரத்து சட்டத்தின் பிரகாரம் கனரக வாகனங்கள் வலபுறம் மற்றும் நடு வழித்தடங்களை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வாகன மொன்றை முந்திச் செல்லும் போது வலப்புறமாகவுள்ள வழித்தடையை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.





சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய கால்கோள் விழா நிகழ்வின் பதிவுகள். (படங்கள்:ஆர்.இராஜகுமார்)

# கண்டாவளைக்கு மின் விநியோகம் மக்களின் கனவு நனவாகியுள்ளது

## பிரதேசசெயலர் முகுந்தன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

அபிவிருத்தியிலே முக்கிய மான ஒருமைல் கல்லில் இன்று கண்டாவளை மக்கள் கால் எடுத்து வைத்திருக்கின்றனர் நாம் மிக வேகமாக எமது பிரதேசங்களுளின் அபிவிருத்தியை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் கண்டாவளைக் கிராம மக்களின் கனவு இன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. என கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கண்டாவளைக்கான மின் விநியோக ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போது இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சாரம் வழங்கப்படுகின்ற போது ஏனைய கிராமத்தில் உள்ள மக்கள் தங்களுக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்று ஏங்குவார்கள். அந்த வகையிலே நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கடந்த ஆண்டு கண்டாவளை நாகதம்பிரான் ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கும் நிகழ்வை மிகத் துரிதமாக முன்னெடுத்த போது நாகேந்திரபுரம், கண்டாவளை ஆகிய கிராமமக்களும் தமது பகுதிகளுக்கும் மின்சாரத்தினை வழங்கவேண்டுமென கோரிக்கைகளை முன் வைத்திருந்தார்கள். அன்றைய தினமே உரிய அதிகாரிகளுக்கு தகவலை தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பணித்திருந்தார், அந்தவகையில் நாகேந்திரபுரத்திற்கும், இன்று கண்டாவளைக்கும் மின்சாரம் கிடைத்திருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது.

ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஒரு வித்தியாசமான அரசியல்வாதி. வெறும் வாக்குறுதிகளை மட்டும் மக்களுக்கு வழங்குகின்ற கலாசாரம் அவருக்கு கிடையாது. மக்களை அபிவிருத்தி நோக்கி அழைத்துச் செல்கின்ற ஒருசாத்திய அரசியல் கலாசாரம் அவருடையது. அந்த வகையில் அபிவிருத்தியின் பயன்கள் மக்களுக்கு செல்ல வேண்டும் என்பதிலே எந்தவித மான அரசியல் பாகுபாடுகளும் காட்டப்படாமல் மக்கள் சமமாக மதிக்கப்பட்டு அவர்களுக்கான அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறது என்பதை இன்றைய இந்த நிகழ்வு எடுத்தியம்பியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெரிய கால்வாயில் விளைந்தது நெல்

(குருநகர்)

பருவப் பெயர்ச்சி மழை வடக்கில் பொய்த்து விட்டதால் களனிகளில் பயிர்கள் நிறம் மாறியும் விளைச்சலைக் கொடுக்காமல் அழிந்துபோக யாழ்.வேம்படி வீதி, இரண்டாம் குறுக்கு வீதி பெரிய வடிகாலில் பயிர்கள் மதாளித்து வளர்ந்து நெற்கதிர்களைக் குடளையும் தள்ளி நிற்கும் காட்சி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தி வருகிறது.

பசளை போட்டு உழுது, மண்ணைப் பண்படுத்தி விளைநெல் தேர்ந்து விதைக்காமல் ஒரு தொகை பயிர்கள் மேற்படி வடிகாலில் விளைந்து அறுவடைக்குத் தயாராக நிற்கின்றன.

அந்தப் பயிர்களில் இருந்து ஒரு கொத்து நெல்லும், இரு சுண்டு அரிசியும் பெறமுடியுமென அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். 'குருவிகள் வினத்தோ அறுவடை செய்தோ பலனடைவதில்லை' என்னும் விவிலிய நூல் கூற்றை மேற்படி சம்பவம் நிச்சயிப்பதாக மக்கள் கருதி வருகின்றனர். (68)

# புதியநிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகத்தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக க.கவாஸ்கர், உபதலைவராக ம.அச்சுதன், செயலாளராக ப.வினூசியன், உபசெயலாளராக வ.வரதாபரன், பொருளாளராக ஜெ.மயூரன் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

✤ ✤ ✤

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மாதர் அபிவிருத்தி முன்னேற்றச்சங்க நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக திருமதி பூபதி நாகலிங்கம், செயலாளராக மிஷாந்தி செல்வராசா, பொருளாளராக திருமதி கமலினிதேவி நேத்திரானந்தம், உபதலைவராக திருமதி விஜயா குமாரதாஸன், உபசெயலாளராக திருமதி கோமள ஜோதி சுபாஸ்கரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (33)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி பூவடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

10 நாட்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவுபெறும். அன்றையதினம் அன்னதான நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

# கால்நடைகளுக்கு தடை

கால்நடைகளான ஆடு, மாடுகளை அவை வசிக்கும் பிரதேசங்களைத் தாண்டி வெளியே கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக கால்நடைகளுக்கு கால்வாய் நோய் தீவிரமாக பரவுகின்றமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கால்நடைகளை வைத்திருக்கும் சகலரும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். அந்தந்த பிரதேச கால்நடை வைத்தியர் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பொது மக்கள் கூடும் இடங்களில் இது தொடர்பான விளம்பரங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரியின். பணிப்புரைக்கு அமைவாக இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நோயைக் கட்டுப்படுத்தவும், கால்நடைகள் மீதான நோய் தாக்கத்தைக் குறைக்கும் முகமாகவுமே இந் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. (48)

# முரசின் இன்றைய பலன்



(24.01.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 11 ஆம் திகதி.
அட்டமி . பி.ப.5.52 வரை. சுவாதி நட்சத்திரம் பி.இ.12.24 வரை.
பின் விசாகம். கரிநாள் / சித்தம்.
இராகுகாலம் 11.06 - 06.36 வரை. சுபநேரம் 06.36 - 08.06 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பயணத்திற்கென்று வெளிக்கிட்டவர் பற்றிய தகவல் இல்லாதிருந்து தற்போது உள்ளார் என்ற செய்தியறிந்ததால் மகிழ்வு, இழுபட்ட அனுமதி கிடைத்ததால் நிம்மதியடைதல். |
| ரிஷபம் | நீண்ட காலம் புத்திரபாக்கியமின்றி இருந்ததால் பிறர் பிள்ளையை எடுத்துவளர்க்க முயல்தல், விண்ணப்பித்த கடன் வசதி கிடைக்க பச்சைக்கொடி காட்டல். |
| மிதுனம் | இடைத்தங்கல் நாட்டினின்றும் விரும்பிய இடத்திற்கு புறப்பட்ட செய்திகிடைத்தல், நோய் காரணமாக ஓய்வுபெற ஆவணங்கள் பற்றிய தகவல்திரட்டுதல். |
| கடகம் | உணவுக்கட்டுப்பாட்டை தீவிரமாகக் கடைப்பிடித்ததால் நீரிழிவு கட்டுப்பாட்டில்வரல், தாயாரின் தேக நலம் மேம்பாடடைந்ததினால் நோய்பற்றிய அச்சம் நீங்குதல். |
| சிம்மம் | பழவகை, ஓடுகள் குரங்குக் கூட்டத்தினால் தேசமடையும் நிலைகண்டு வருந்தல், மக்களின் அழைப்பின் பிரகாரம் வெளியூர் கிட்டும் செய்திவருதல். |
| கன்னி | குரு பத்தில் இரும்பதினால் இடமாற்றச் செய்தி வரலாம் என்ற பதகளிப்பு ஏற்படல், நிலுவை அதிகமானதால் மின்சாரம் துண்டிக்கப்படும் நிலை ஏற்படல். |
| துலாம் | வயது வித்தியாசம் அதிகமாகக் காணப்படுவதினால் மணமகனை ஏற்கபெற்றோர் விரும்பாமை, ஏழரைச் சனி இருப்பதினால் புதிய முயற்சி ஆரம்பிக்க மனதில் குழப்பநிலை ஏற்படல். |
| விருச்சிகம் | தொழிலைக் கைவிட்டு வெளியூர் அழைப்பை ஏற்று பிரயாண முயற்சியில் ஈடுபடல், சக ஊழியர்களைத் தட்டிக கொடுத்ததால் பணிச்சுமை வெகுவாகக் குறைவடைதல். |
| தனுசு | வியாபாரம் மந்த கதியில் சென்றதை அடுத்து பயண முயற்சிக்கு மன நாட்டம் ஏற்படல், போக்குவரத்து சட்டவிதியை மீறியதால் தண்டனைக்குள்ளாதல். |
| மகரம் | நாவைக்காத்ததினால் வரவிருந்த ஆபத்து முளையிலேயே அற்றுப்போதல், நம்பியிருந்த பணவரவு கிடைக்காமையினால் சுபகாரியம் ஒத்திவைத்தல். |
| கும்பம் | வரவிருக்கும் நிலுவைபற்றி தொலைபேசிச்செய்தி மூலம் ஞாபகமூட்டல், கணித பாடத்தில் திறமைச்சித்தி கிடைக்காதபடியினால் உத்தியோக வாய்ப்புக்கள் நழுவிச்செல்லல். |
| மீனம் | தகுதி குறைந்தாலும் நற்பண்பு கொண்டவரை மணம் முடிக்க நேர்ந்ததால் திருப்திகாணல், பிரிவுத் துயர் வாட்டினாலும் மனதைத்திடப்படுத்தி வாழமுயலல். |

## இலங்கை டெஸ்ட் குழாம் அறிவிப்பு

(கொழும்பு)

பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம் பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த வீரர்களில் 13 வீரர்கள் இக்குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

அக்குழாமில் இடம்பெற்றிருந்த சச்சித்திர சேனநாயக்க, லஹிரு திரிமன்ன இருவரும் இக்குழாமில் இடம்பெறவில்லை. சச்சித்திர சேனநாயக்கவிற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதோடு, லஹிரு திரிமன்னவிற்கு உபாதை காரணமாக இடம் கிடைக்கவில்லை.

2 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சண்டிமால், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, கௌஷால் சில்வா, திமுத் கருணாரத்ன, கித்துருவன் விதானகே, பிரசன்ன ஜெயவர்த்தன, நுவான் குலசேகர, சுரங்க லக்மல், ஷமிண்ட எரங்க, நுவான் பிரதீப், அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, விஷ்வா பெர்னான்டோ.

## சிறப்பு சுழற்பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக வோர்ன் நியமனம்



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் சிறப்பு சுழற்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மார்ச் மாதம் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக ருவென்ரி-20 தொடரில் சுழற்பந்து வீச்சு அதிக பங்கை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையிலேயே அவுஸ்ரேலியாவின் சிறப்பு சுழற்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக ஷேன் வோர்ன் உலக ருவென்ரி-20 தொடருக்காகச் செயற்படவுள்ளார். அவர் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் ஆலோசகராக டரன் லீமனுக்கு பங்களிப்புகளை வழங்குவார் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவின் தேசிய அணிகள் சிறப்புத் தகுதிவாய்ந்த விசேட பயிற்றுவிப்பாளர்களின் பயிற்சிகளின் உதவியுடன் சிறந்த பலனைப் பெற முடியுமெனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை, அதன்படி உலக ருவென்ரி-20 தொடருக்கு முன்னதாக ஷேன் வோர்ன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதன்படி, அவுஸ்ரேலியாவின் தென்னாபிரிக்கச் சுற்றுலாவில் அவ்வணியோடு இணையவுள்ள வோர்ன், பங்களாதேஷ் உலக ருவென்ரி-20 தொடரிலும் பணியாற்றவுள்ளார்.

## பணத்தை அள்ளும் பி.சி.சி.ஐ.

(சென்னை)

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) பல்வேறு வகையில் வருமானத்தை குவித்து வருகிறது.

அணி ஒப்பந்தம், தொலைக்காட்சி விளம்பரம் உட்பட பல வழிகளில் பணத்தை அள்ளுகிறது. இதேபோல ஐ.பி.எல். போட்டி மூலமும் கணிசமான பணம் குவிகிறது.

கடந்த ஆண்டு (2013) நடாத்தப்பட்ட 6ஆவது ஐ.பி.எல். போட்டி மூலம் கிரிக்கெட் சபைக்கு ரூ.385.36 கோடி இலாபம் கிடைத்துள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த பி.சி.சி.ஐ.யின் நிதிக்கமிட்டி கூட்டத்தின் மூலம் இது தெரியவந்ததாக கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

2012ஆம் ஆண்டை விட பி.சி.சி.ஐ.க்கு ரூ.210 கோடி கூடுதலாக இலாபம் கிடைத்துள்ளது. 2012ஆம் ஆண்டு ஐ.பி.எல் போட்டி மூலம் 174.73 கோடி இலாபம் கிடைத்தது.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் அஜித் வடேகரின் மருத்துவ செலவுக்கான தொகை ரூ.5.33 இலட்சம், வெளிநாட்டில் சென்று மருத்துவ சிகிச்சை பெற்றதற்காக மனோஜ் திவாரியின் மருத்துவ செலவு ரூ.26 இலட்சம் ஆகியவற்றுக்கு பி.சி.சி.ஐ.யின் நிதிக்குழு ஒப்புதல் அளித்தது.

இதேபோல டெண்டுல்கருக்கு ரூ.3.55 இலட்சம், பிரவீன்குமாருக்கு ரூ.3.72 இலட்சம் மருத்துவச் செலவுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

# அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் இறுதியில் லீநா-சிபுல்கோவா மோதல்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் லீநா-சிபுல்கோவா ஆகியோர் மோதவுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் சீன வீராங்கனை லீநா, கனடாவின் யுஜின் பவுச்சார்டை எதிர்கொண்டார். 14ஆம் நிலை வீராங்கனை சேர்பியாவின் அனா இவானோவிச்சை காலிறுதியில் தோற்கடித்த 31ஆம் நிலை வீராங்கனை கனடாவின் யுஜின் பவுச்சார்டை லீநா தோற்கடித்துள்ளார்.

லீநா தனது அபாரமான ஆட்டத்தை வெளிபடுத்தி 6-2, 6-4 என்ற நேர் செட்டில் பவுச்சார்டை சுலபமாக தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு அரையிறுதி ஆட்டம் ஒன்றில் 20ஆம் நிலை வீராங்கனை டோமினிகா சிபுல்கோவா (சுலோவக்கியா) 5ஆம் நிலை வீராங்கனை அக்னிஸ்கா ராட்வன்ஸ்காவை (போலந்து) எதிர்க்கொண்டார்.

இதில் டோமினிகா சிபுல்கோவா 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ராட்வன்ஸ்காவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவின் உலகின் முதல் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்), 22ஆம் நிலை வீரர் டிமித்ரோவை (பல்கேரியா) எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரபெல் நடால் 3-6, 7-6, 7-6, 6-2 என்ற செட் கணக்கில் தனக்கு கடும் சவால் அளித்த 22 வயதான டிமித்ரோவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு கால் இறுதி ஆட்டத்தில் 6ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), 4ஆம் நிலை வீரர் ஆன்டி முர்ரேவை (இங்கிலாந்து) சந்தித்தார். 18ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை குறிவைக்கும் பெடரர் 6-3, 6-4, 7-6 (8-6) 6-3 என்ற செட் கணக்கில் முர்ரேவை சாய்த்து 11ஆவது முறையாக அவுஸ்ரேலிய ஓப்பன் அரை இறுதிக்குள் நுழைந்தார்.

அரையிறுதி ஆட்டத்தில் ரபெல் நடால்-ரோஜர் பெடரர் பலப்பரீட்சை நடாத்தவுள்ளனர்.

## ஆரம்பம் சறுக்கினால் தோல்வி நிச்சயம்

(ஹமில்டன்)

பெரிய இலக்கை துரத்தும் ஒரு இனிங்ஸில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தால் நடுவரிசை வீரர்களுக்கு கடும் அழுத்தத்தை அது ஏற்படுத்தும் அதேவேளை இறுதியில் அது தோல்விக்கே வழிவகுக்கும் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

ஆட்டத்தில் சில விடயங்களில் நாங்கள் மாற்றம் செய்ய வேண்டும். மாற்றத்துக்கு பின்னர் எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். சில விடயங்கள் எங்களுக்குச் சாதகமாக அமையவில்லை. ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்கு அவை முக்கியமான அம்சமாகும். அணி உடைமாற்றும் அறையில் நல்ல நம்பிக்கைதான் நிலவுகிறது. அறையில் நல்ல சூழ்நிலையைத்தொடர எங்களால் முடியும். நாங்கள் விக்கெட்டை இழக்காமல் நல்ல தொடக்கம் காண வேண்டியது அவசியமாகும். 290 ஓட்டங்களுக்கு மேலான இலக்கை துரத்துகையில் முதல் 10 ஓவர்களில் 38 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்தால் நடுவரிசை வீரர்களால் சிறப்பாக செயற்படுவது கடினமானதாகும். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்து நின்று ஓட்டங்கள் சேர்த்தால் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி ஏற்படாது. நல்ல ஆரம்பத்தைப் பெற்றுக்கொள்வதும், பெரிய இணைப்பாட்டத்தை உருவாக்குவதும் அணியின் வெற்றிக்கு முக்கியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெற்றி குறித்து நியூசிலாந்து அணிக் கப்டன் பிரண்டன் மக்கலம் கருத்துத் தெரிவிக்கையில், வலுவான துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இந்திய அணிக்கு எதிராக நெருக்கடியைச் சமாளித்து அடுத்தடுத்து வெற்றியைப் பெற்றிருப்பது எங்கள் அணியின் நம்பிக்கையை அதிகரிக்கும். வரும் ஆட்டங்களிலும் எங்களது சவாலான ஆட்டத்தை தொடர முயல்வோம். வில்லியம்ஸன், ரெய்லர், குப்தில் ஆகியோர் நல்ல அடித்தளம் அமைத்தனர். அண்டர்சன் அதிரடியாக ஓட்டங்களைச் சேர்த்தார். எங்கள் பந்து வீச்சாளர்கள் முதலிலேயே விக்கெட்டை வீழ்த்தி இந்திய அணிக்கு சரியான நெருக்கடி கொடுத்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சென். ஜோண்ஸ்-கொழும்பு றோயல் கல்லூரி இன்று மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி ஒன்று இன்றைய தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் வரலாற்றில் பலம் வாய்ந்த அணியாக கொழும்பு றோயல் கல்லூரி திகழ்வதால், சென். ஜோண்ஸ் கல்லூரி தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி சிறந்ததொரு சவாலை அளித்து தமது திறமைகளை பட்டை தீட்டிக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்.பி.)

## தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்ட ஹோலி



நான் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டேன். போட்டியின்போது எதிராளிகளுடன் வாக்குவாதத்தில்ஈடுபடுவது தேவையற்றது என்பதை இப்போது உணர்ந்திருக்கிறேன் என இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் ஹோலி தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டில் அதிரடிக்கும், ஆக்ரோஷத்துக்கும் பெயர்போன கோலி, அதே அளவுக்கு களத்தில் வீரர்களிடம் சண்டையிடுவதிலும் பெயர் பெற்றவர். இதனால் அடிக்கடி விமர்சனத்துக்குள்ளான ஹோலி, இப்போது அதுபோன்ற வாக்குவாதம் தேவையில்லை என்பதை உணர்ந்திருக்கிறார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியது:

ஆரம்பத்தில் அடிக்கடி எதிரணி வீரர்களிடம் வாக்குவாதம் செய்து தவறிழைத்திருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்தத் தவறுகளை சர்வதேச கிரிக்கெட்டில் செய்யக்கூடாது என்பதை இப்போது உணர்ந்திருக்கிறேன். நான் இப்போது கொஞ்சம் முதிர்ச்சியடைந்திருக்கிறேன். முதல் போட்டியில்கூட நியூசிலாந்து வீரர்கள் என்னை வெறுப்பேற்றினார்கள். ஆனால் நான் எதுவும் சொல்லாமல் துடுப்பால் பதிலடி கொடுத்தேன். நீங்கள் களத்தில் இருக்கும்போது வார்த்தைகளால் மோதக்கூடாது. துடுப்பால் மட்டுமே பதில் சொல்லவேண்டும்.


இப்போது எதிரணிகள் என்னை வீழ்த்த விரும்புகின்றன என்பது எனக்குத் தெரியும். அதனாலேயே அவர்கள் என்னை சீண்டுவதோடு, சண்டைக்கும் இழுக்கிறார்கள். ஆனால் நான் இப்போது அவுட்டாகாமல் இருப்பதற்கு அதுதான் காரணம். கடுமையான சவாலை நான் மிகவும் விரும்புகிறேன்.

நான் இப்போது 21 வயதில் இல்லை என்பது மக்களுக்கு தெரியும். கோபத்தை எங்கு கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரியாமல் இருப்பதற்கு நான் முதிர்ச்சியடையாதவன் இல்லை.

எனது கோபத்தை கட்டுப்படுத்தாமல் போயிருந்தால் நான் இப்போது இங்கு இருந்திருக்க முடியாது. எனது கிரிக்கெட் வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னதாகவே முடிவுக்கு வந்திருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆளுநர் வெற்றிக் கிண்ண சதுரங்கப் போட்டியின் ஆரம்ப விழா





பட உதவி : நந்தகுமார்

(யாழ்ப்பாணம்)


வடக்குமாகாண ஆளுநர் செயலகத்தினால் வடக்கு மாகாண பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் ஆளுநர் கேடயத்துக்கான சதுரங்கப் போட்டித் தொடரின் ஆரம்பம் வைபவம் நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டத்தில் நடைபெற்றது.

இதில் பல வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, இந்த வருடம் இரண்டாயிரத்துக் கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் இந்தச் சதுரங்கப் போட்டிகளில் பங்குகொள்கின்றனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் என ஐந்து மாவட்டங்களிலிருந்தும் இவ்வாறு வீர,வீராங்கனைகள் பங்குகொள்வது மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது. சதுரங்கப் போட்டியைப் பொறுத்தவரை ரஷ்யா, இந்தியா நாடுகள் பல சாதனையாளர்களை உருவாக்கியிருக்கின்றது. உலக வரலாற்றில் இரு நாடுகளுமே முதலிரு இடங்களைத் தக்கவைத்துள்ளனர். சகல நாடுகளிலும் ஆசிரியர்,மாணவர்கள் மத்தியில் சதுரங்க விளையாட்டு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அந்த அடிப்படையில் புத்திக்கூர்மையுள்ள சமூகமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை எமது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அவரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் நிச்சயம் வடக்கு மாகாண வீர,வீராங்கனைகள் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குகொண்டுள்ள அவர்களது ஊக்கத்தைப் பார்க்கும்போது சதுரங்க விளையாட்டில் அவர்கள் நாட்டிற்கும் மாகாணத்திற்கும் பெருமை சேர்க்கக் கூடிய வீரர்களாக மிளிர்வார்கள் என்ற நம்பிக்கை அதிகம் உள்ளது என நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (137)

# துவாரகசீலன் இரட்டைச் சதம் சென். ஜோண்ஸ் பெருவெற்றி




ஜொனியன்ஸ்களின் போர் என வர்ணிக்கப்படும் அகில இலங்கை சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ருவென்ரி-20 தொடரில் சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி வீரர் கபில்ராஜ் விருந்தினர்களிடமிருந்து விருதைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம். (எஸ்.பி.)

(யாழ்ப்பாணம்)

துவாரகசீலனின் இரட்டைச் சதத்தின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 369 ஓட்டங்களால் பெருவெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இந்நிலையில்தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டு நாள் ஆட்டம் 21,22ஆம் திகதிகளில் சென்.ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை யூனியன்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி துவாரகசீலன், கானாமிர்தன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் துவாரகசீலன் 188 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 26 பவுண்டரிகள் அடங்கலாக 202 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி சார்பாக இரட்டைச் சதம் விளாசிய முதல் வீரர் என்ற சிறப்பை துவாரகசீலன் பெற்றுக் கொண்டார். இதற்கு முன்னர் 1966 ஆம் ஆண்டு வீரன் கனகையா சூரிஸ்குமார்ஸ் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எதிராக 181 ஓட்டங்களைப் பெற்றமையே சென். ஜோண்ஸ் கல்லூரி சார்பாக அதிகூடிய ஓட்டங்களைப்பெற்ற வீரர் என்ற சாதனையாக இருந்தது. மற்றும் கானாமிர்தன் 105 ஓட்டங்களைப் பெற்றார்.



430 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யூனியன் கல்லூரி அணி 37.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 369 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (48)

# யாழ். மத்தி இனிங்ஸ் வெற்றி




(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 97 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும்,யாழ்.மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான ஆட்டம் கடந்த 17,18ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றகொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 97 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 56 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 65, அலன்ராஜ் 190 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 67, யூனியஸ் கனிஷ்டன் 73, டினோஜன் 23, ஜெயந்திரன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன் நான்கு, குணசாந் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனலக்ஷன் 41, லிங்கநாதன் 9 ஓட்டங்களைப் பெற்றனர்.பந்து வீச்சில் நிருபன், மதுஷன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 194 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் யாழ். மத்திய கல்லூரி அணியால் மீண்டும் துடுப்பாட அழைக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பார்த்தீபன் ஆட்டமிழக்காது 41, லிங்கநாதன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மதுசன் நான்கு, நிருபன், அலன்ராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி இனிங்ஸ் மற்றும் 97 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

# ஸ்கந்தாவின் மரதன் ஓட்டம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120ஆவது வருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இன்றைய தினம் காலை 6.30 மணிக்கு கல்லூரி வீர,வீராங்கனைகளுக்கான மரதன் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இதேவேளை, விளையாட்டுப் போட்டிக்கான தெரிவு எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், விளையாட்டுப் போட்டி 15ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கைதடி நவபுரம் எருதிடல் அ.த.க.வின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கைதடி)

கைதடி வடக்கு நவபுரத்திலுள்ள எருதிடல் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை முதல்வர் நடராசா ஜெயரூபன் தலைமையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளதுடன். சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் அ.மனோறஞ்சிதன் கெளரவ விருந்தினர்களாக நவபுரம் சனசமூக நிலைய தலைவர் மு.சிவராசா, நவபுரம் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் சி.மகாராசா, நவபுரம் துர்க்கை அம்மன் ஆலய தலைவர் மு.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு போட்டியாளர்களை உற்சாகமூட்டுமாறு பாடசாலைச் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (90)

# வடக்கின் உண்மையான அபிவிருத்திக்காக உழைப்பவர்களின் கவனத்துக்கு!

— சாலையூரான் -

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆகக் குறைந்த பங்களிப்பை






வடக்கு மாகாணம் வழங்குவதாக ஒரு தகவலை பேராதனை பல்கலைக்கழக முன்னாள் பொருளியல் துறை பேராசிரியர் எஸ். வரதராஜன் பதிவு செய்திருக்கிறார்.

ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணத்திற்கே கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்திருப்பதாக அரசுத்தரப்பு கூறிவரும் நிலையில் நாட்டின் வடக்கின் உற்பத்தி நடவடிக்கைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை பேராசிரியரின் இந்தக் கூற்று வெளிப் படுத்துகிறது.

மொத்த உற்பத்திக்கு அரசாங்க சேவையின் பங்கு வெறும் 8 சதவீதமாக மாத்திரமே இருக்கும் நிலையில் இதில் 25 சதவீத பங்களிப்பை அதாவது காற்பங்கினை சேவைத்துறை மூலம் வடக்கு மாகாணம் பெற்றுவருவதும் இந்தத் தகவலில் வெளியாகியிருக்கிறது.

பொதுவில் சேவைத்துறைக் கான ஒதுக்கீடு என்பதை மக்களின் அபிவிருத்தி நடவடிக் கைகளுக்கான அரசின் நேரடி ஒதுக்கீடாகவே நாம் கருதிக் கொண்டிருக்கிறோம்..

ஆனால், இதில் அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட வடக்கின் பாதுகாப்பு தரப்பின ருக்கான ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கியே மாகாண மட்டத்தில் அரசின் சேவைத் துறைக்கான பங்களிப்புகள் கணக்கிடப்படுவதையும் பேராசிரியர் சுட்டிக்காட்டி யிருக்கிறார்.

இலங்கையின் ஆண்டுக்கான சராசரி தனிநபர் வருமானம் பற்றிய அவரது குறிப்பில் வடமாகாணத்தை சேர்ந்தவர்களின் தனிநபர் வருமானம் ஆகக்குறைந்த மட்டத்தில் இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதாவது 2011இல் அதிகூடுதலான தனிநபர் வருமானமாக 4இலட்சத்து 90ஆயிரத்து 498ரூபாவை மேல்மாகாணம் பெற்றிருக்கும் நிலையில் அனைத்து மாகாணங்களையும் விட ஆகக்குறைந்த வருமான-மாக 3இலட்சத்து 13ஆயிரத்து 576ரூபாவை வடமாகாணம் பெற்றிருப்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வாறே மாகாண ரீதியாக வறுமை நிலையில் முதலாம், இரண்டாம் இடத்தை முறையே கிழக்கு, மற்றும் வடக்கு மாகாணங்கள் வகித்து வருவதும் இவ்விடத்தில் கவனத்துக்குரியது.

புள்ளிவிபரங்களினூடான இந்த மதிப்பீட்டில் வடக்கின் பிரதான உற்பத்தி துறைகளான கடற்றொழில் விவசாய முயற்சிகளின் நிலையூடான மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றங்கள் இப்பந்தியில் ஆராயப்படவில்லை.

சொந்த முயற்சிகளினூடான வடமாகாண மக்களின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தின் சேவைத்துறை எத்தகைய பங்களிப்பை கொண்டிருக்கிறது என்பதும் அதனை தொடர்பு படுத்தி மக்களின் வாழ்க்கை முன்னேற்றங்கள் வடக்கில் என்ன நிலையில் இருக்கிறது என்பதை இந்த குறிப்பில் அறிந்துகொள்ள முடியவில்லை.

உண்மையில் இந்த இரு பிரதான தொழில் துறைகள் சார்ந்து வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஒரு நெருக்கடி நிலையிலேயே இதற்கான முயற்சிகள் இருக்கின்றன. அதிகரித்த உற்பத்தி செலவீனங் களால் பயிர்த்தொழில் சார்ந்து அதனுடன் தமது வாழ்க்கையை பொருத்திக்கொண்டிருப்ப தென்பது வடக்கு மக்களை பொறுத்தவரை பெரும் சவாலாகவே இருக்கிறது.

கடலுணவு உற்பத்தியை பொறுத்தவரை குறிப்பாக புறக்காரணங்களால் பிடிக்கப் படும் மீனின் அளவு வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் இதற்காக கொழும்பு சந்தைகள் அதிக விலையை கொடுக்க தயாராக இருப்பது இந்த தொழிலில் ஈடுபடுபவர் களே தமக்கான உணவுக்கு தேவையான மீனை பெற்றுக் கொள்வதை நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது.

இந்த நிலையில் கூடுதல் நிதியை வடமாகாணத்துக்கு அரசாங்கம் ஒதுக்குவதை அங் குள்ள மக்கள் தமது வாழ்க்கை முன்னேற்றங்களுக்கு பயன் படுத்த முடியாத நிலையில் இருப்பதையும் அந்த நிதி ஒதுக் கீடுகள் அந்த மக்களின் உற்பத்தி சார்ந்த முயற்சிகளுக்கு பயன்படும்போதே அதனை வடக்கு மக்களுக்கான ஒதுக் கீடாக கொள்ள முடியுமென்ப தையும் பேராசிரியர் தனது குறிப்பில் வெளிப்படுத்தியிருப் பதாக தோன்றுகிறது.

நீண்ட போருக்குப்பிறகு, புள்ளிவிபரங்கள் கூறும் இந்த தகவல்களும் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கை முன்னேற் றங்களும் சரியாக இருக்க வேண்டுமாயின் அவர்களது வாழ்வு மேம்பாட்டுக்காக அரசு மேற்கொள்ளும் பிரயத் தனங்களில் சரியான மாற்று வழிமுறை இனங்காணப்பட வேண்டும். அவ்வளவுதான்.

## எழுதப்படாத கவிதையின் இறுதி வரி

- ஜ்யோவ்ராம் சுந்தர் -



மதிலில் இருந்து தாவப்போகும்
பூனையைப் போல் மரணத்திற்குக் காத்திருக்கிறேன்
என் மரணமல்ல –
வெற்றிடத்தைக் காற்று நிரப்பும்
என்று தத்துவம் பேசி
மனைவிக்கு ஒன்றும் விட்டுச் செல்லாத
என்னுடைய கையாலாகாத்தனமே
அதிகம் துன்புறுத்துகிறது
அவளருகில் படுத்திருந்த இரவுகளில்
என்னை வெளிப்படுத்த ஆசைப்பட்டிருக்கிறேன்
அவளுடன் போட்ட பைசாவுக்குப் பிரயோஜனமில்லாத
சண்டைகளைக்கூட இப்போது நினைக்கையில்
சுகமாயிருக்கிறது
நாளைக் காலை
என்னுடைய வெளிறிய உடலைப் பார்ப்பாள்
உலுக்குவாள்
என் பெயர் சொல்லி அழைப்பாள்
ஆனால் நான் பதில் சொல்ல மாட்டேன்
எப்போதும் அவளிடம் சொல்லத் தயங்கிய
வார்த்தைகளை இப்போது சொல்ல நினைக்கிறேன் :
நான் உன்னைக் காதலிக்கிறேன் கண்ணே

(சாள்ஸ் ப்யூகோவ்ஸ்கியின் கவிதையொன்றை ஒட்டி எழுதப்பட்டது)

## சொந்த ஜென் கதைகள்

– பேயோன் –



### நிரப்புதல்

துறவி ரியோகான் ஒரு மலை உச்சியிலிருந்து சிறு கற்களை ஒவ்வொன்றாக எறிந்துகொண்டிருந்தார். அவரை சாப்பிட அழைக்க வந்த இளம் சீடன், "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் குருவே?" என்று கேட்டான். "இந்தப் பெரும்பள்ளத்தை நிரப்பிக்கொண்டிருக்கிறேன்" என்றார் ரியோகான். "உங்களுக்கென்ன பைத்தியமா? இது சாத்தியமா?" என்றான் சீடன். அதற்கு ரியோகான், "அதை நீ பள்ளத்திடம் அல்லவா கேட்க வேண்டும்?" என்றார்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் நாமே செய்வதாக நம்புவது முட்டாள்தனம்.

### ஊற்றுதல்

மெய்ஜி காலத்து ஜென் குருவான தனகவாவைப் பார்க்க ஒரு பல்கலைக்கழகப் பேராசியர் வந்தார். ஜென் பற்றிய முழுமையான விளக்கத்தை அளிக்கும்படி தனகவாவிடம் பேராசிரியர் கேட்டுக்கொண்டார்.

தனகவா பேராசிரியருக்காக ஒரு தேனீர்க் கோப்பையை எடுத்துவைத்து அதில் தேனீரை ஊற்றினார். கோப்பை நிரம்பியது. ஆனால் தனகவா நிறுத்தாமல் ஊற்றிக்கொண்டிருந்தார். பேராசிரியர் திகைத்துப் போய் பார்த்துக்கொண்டிருந்தார். தனகவா இன்னொரு குடுவையில் மேலும் தேனீர் வரவழைத்து தொடர்ந்து அதே கோப்பையில் நிரம்பி வழிய ஊற்றினார். பேராசிரியர் பொறுமையிழந்து, "அதுதான் நிரம்பிவிட்டதே. பிறகு ஏன் விடாமல் ஊற்றுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"வாழ்வில் அபத்தங்களுக்கு முடிவே கிடையாது" என்றார் தனகவா.

### சுமத்தல்

ஒரு மூத்த துறவியும் இளம் துறவியும் மடால யத்திற்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர். மழை பெய்து சாலைகளில் குட்டைகளை உருவாக்கியிருந்தன. ஓர் இடத்தில் ஓர் அழகிய இளம்பெண் ஒரு குட்டையைத் தாண்டிச் செல்ல முடியாமல் நின்றிருந்தாள். மூத்த துறவி அவ-ளிடம் சென்று அவளைத் தூக்கிக்கொண்டு சாலை யின் மறு பக்கத்தில் இறக்கிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

"துறவிகளான நாம் ஒரு பெண்ணைத் தொட லாமா?" என்று இளம் துறவி மூத்த துறவியிடம் கேட்டார். "இது தெரிந்தே கேட்கிற கேள்வி மாதிரி இருக்கிறதே" என்றார் மூத்த துறவி.

அறிந்ததைக் கடந்து புதியதை அறி என்று ஜென் கூறுகிறது.


## இல்லை! இல்லை! இல்லை!




- ஈசலுக்கு வயிறு இல்லை.
- தேளுக்கு காதுகள் இல்லை.
- மண்புழுவுக்கு கண் இல்லை.
- வண்ணத்துப் பூச்சிகளுக்கு வாய் இல்லை.
- ஈக்களுக்குப் பற்கள் இல்லை.
- ஆண் நுளம்புகள் கடிப்பதில்லை.
- வெட்டுக்கிளி, குழிமுயல் ஆகியவை தண்ணீர் அருந்துவது இல்லை.
- பூச்சிகள், புழுக்கள் தூங்குவதே இல்லை.
- ஆமைக்கு பற்கள் இல்லை.
- முதலை, மீன், பாம்பு இவற்றின் விழிகளுக்கு இமைகள் இல்லை.
- குளிர்ப் பிரதேசங்களில் பல்லிகளே இல்லை.
- அவுஸ்திரேலியாவில் மரங்கொத்திப் பறவைகள், கரடிகள் இல்லை.
- பெண் பெங்குவின் பறவைகள் முட்டையை அடைகாப்பது இல்லை.
- வெளவால் முட்டை இடுவது இல்லை.
- பறவைகளுக்கு சிறுநீர்ப்பை இல்லை.
- அமெரிக்க எலி, கங்காரு ஆகியவை தண்ணீர் அருந்துவது இல்லை.

# கெஜ்ரிவால் - ஒரே கல்லில் பல மாங்காய்கள்...!

– காவிரிமைந்தன்



நம் மீது கருணை மிகச் கொண்டு, தன்னைப் புரிந்து கொள்ள 6 மாதம் ஒரு வருடமெல்லாம் காத்திருக்க வேண்டாம் - இப்போதே புரிந்து கொள்ளலாம் என்று தன் சுய உருவத்தை இப்போதே உரித்துக் காட்டி விட்டார் அர்விந்த் கெஜ்ரிவால்.

காங்கிரஸ் ஆட்சியில் - ஆதர்ஷ் அடுக்குமாடி கட்டடம், 2ஜி ஸ்பெக்ட்ரம், நிலக்கரி ஊழல், விலைவாசி உயர்வு, என்று அலையலையாக ஊழல்கள் உச்சகட்டத்தில் வெளிவந்தபோது வெளிப்படாத ஆக்ரோஷம் -

வாத்ரா நில விவகாரங்கள் வெளிவந்தபோது - கறுப்புப் பணம் பதுங்கியபோது வெளிவராத ஆக்ரோஷம் -

இப்போது எப்படி வெளிவந்தது...?

டெல்லி முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு தான் பொலிஸ் அதிகாரம் டெல்லி முதலமைச்சருக்கு கிடையாது என்பது தெரிய வந்ததா?

பொறுப்பில்லாமல் தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்ற முடியாத அளவுக்கு சிக்கலானவை -

அனுபவம் இல்லாத, மண்டைக்கனம் மிக்க அவரது சகாக்களால் ஏற்படும் விளைவுகள் தொடர்ந்து ஆட்சியில் இருந்தால் கெட்ட பெயரைத் தேடித்தந்து விடும் -

டெல்லி முதல்வர் பதவியில் தொடர்ந்தால் - அது பாராளுமன்றத்திற்கு போட்டி போடுவதற்கு தடங்கலாக இருக்கும் -

எனவே...? மகா புத்திசாலி அல்லவா..?

ஒரே கல்லில் பல மாங்காய்கள்...!

முதலமைச்சராக இருந்து கொண்டு - தடையுத்தரவை மீறினால்..? சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை முதல்வரே உண்டு பண்ணினால்...? ஆயிரக்கணக்கான கட்சிக்காரர்களுடன் சேர்ந்து பொலிசுடன் மோதலை உருவாக்கி கலவரத்தை உண்டு பண்ணினால்...?

ஆட்சி “டிஸ்மிஸ்” - மக்களிடையே “பழி வாங்கப்பட்டவர்” என்கிற இமேஜ்.

நல்லது செய்ய முயன்றேன் - டிஸ்மிஸ் செய்து விட்டார்கள்..என்று வேடம்.

எந்தவித தடங்கலும் இல்லாமல் - புதிய ஒப்பனையுடன் - நாடாளுமன்றத் தேர்தலில் இறங்கலாம்.

சபாஷ் கெஜ்ரிவால்...!!!

**பகுதி -2**

(மேற்பகுதி கெஜ்ரிவால் பல்டி அடிப்பதற்கு முன்னர் எழுதப்பட்டது. பல்டி அடித்த பின் கிடைத்த தகவல்கள் கீழே - )

பல்டி அடிப்பதற்கான காரணங்களாக கெஜ்ரிவால் சொன்னது -

1) கவர்னர் விசாரணையை துரிதப்படுத்த ஒத்துக் கொண்டிருக்கிறார்.

2) இரண்டு அல்லது மூன்று பொலிஸ்காரர்கள் (கடைநிலையில் உள்ளவர்கள்) லீவில் அனுப்பப்படுவார்கள்.

உண்மையான பின்னணி -

முன்பெல்லாம் போராட்டங்கள் ராம் லீலா மைதானத்தில் நடைபெற்றதால், பொது மக்களுக்கோ, போக்குவரத்துக்கோ எந்தவித குந்தகமும் ஏற்படவில்லை.

ஆனால் இந்த முறை, கெஜ்ரிவால் மத்திய டெல்லியில் வழியை மறித்து போராட்டம் நடாத்தியதாலும், மெட்ரோ ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாலும் பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டது. அதனால், மக்கள் இதை ஆதரிக்கவில்லை.

கெஜ்ரிவால் மக்கள் வெள்ளத்தையே அழைத்ததற்கு, 10,000 மக்களுக்கு மேல், (அதுவும் கட்சிக்காரர்கள் மட்டுமே) திரளவில்லையாம்.

போராட்டம் பிசுபிசுக்கப்போவது கண்டு, கவர்னருடன் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆம் ஆத்மி (கொள்கை பரப்பு) யோகேந்திர யாதவ் - நேரில் சென்று சந்தித்து, போராட்டத்தை நிறுத்திக் கொள்கிறோம். ஆனால் - சலுகையாக நீங்கள் எதாவது அறிவிப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில்தான் இந்த (லீவு) சலுகை அளிக்கப்பட்டதாம்.

பொதுவாகவே -இத்தகைய விசாரணைகள் நடக்கும்போது இடமாற்றம் செய்வார்கள் அல்லது தற்காலிக பணிநீக்கம் செய்வார்கள். இங்கே அது கூட இல்லை. அரசாங்க செலவில் லீவு..!


டெல்லியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு பொலிஸ் அதிகாரம் கிடைக்காமல் ஓய மாட்டோம் என்றவர் திடீரென்று வாபஸ் வாங்கியதன் பின்னணி இது தான்..!

காங்கிரஸ் முழுக்க முழுக்க ஆம் ஆத்மிக்கு சாதகமாக வேலை செய்திருக்கிறது. இதுவே வேறு சந்தர்ப்பமாக இருந்தால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டு விட்டது என்று கூறி அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டு - அந்த இடத்தில் இந்நேரத்திற்கு புல் முளைத்திருக்கும்.

மத்திய உள்துறை அமைச்சர் ஷிண்டேயை கெஜ்ரிவால் படுமோசமாக (பெர்சனலாக) திட்டிப் பேசியதற்கு, ஷிண்டேக்கு சொரணை இருந்தால் - இந்த சமரசம் வருவதற்கு முன்னரே அவர் ராஜினாமா செய்துவிட்டுப் போயிருக்க வேண்டும்..!

# வாழ்நாள் கனவாக ஒரு புத்தகம்!

– சமஸ்



தமிழ்ச் சிந்தனை உலகம் காலங்காலமாகக் காத்திருந்த ஒரு புத்தகத்தை, தன் வாழ்நாள் கனவுகளில் ஒன்றாக நினைத்திருந்த மொழிபெயர்ப்பைக் கொண்டுவந்திருக்கிறார் எஸ். வி.ராஜதுரை. நம்பகமான மொழிபெயர்ப்பில், விரிவாக ஆங்கிலம் - தமிழ் இரு மொழி நூலாக வெளியாகியிருக்கிறது “கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை”.

உலகிலேயே அதிகம் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகம் என்று பைபிளைக் குறிப்பிடுவார்கள் (2,798 மொழிகள்). “கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை”க்கு அப்படி ஒரு தெளிவான கணக்கு இல்லை என்றாலும், நிச்சயம் உலகிலேயே அதிகம் பெயர்க்கப்பட்ட நவீனப் பிரதி இதுதான்.

கம்யூனிஸ்ட்டுகள் இரகசியமாகச் செயற்பட வேண்டியிருந்த காலகட்டத்தில் - 1848இல் தத்துவார்த்த நடவடிக்கை வேலைத் திட்டமாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவராலும் இணைந்து எழுதப்பட்ட இந்த நூலே, உலகம் முழுவதுமுள்ள பொதுவுடைமை இயக்கங்களின் வேதம் என்று சொல்லலாம். “இதுவரையிலான சமூகத்தின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே” என்று கூறும் மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் இருவரும் பொதுவுடமைச் சமூகத்தை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகளைப் பரிந்துரைக்கும் இந்நூல், உலக அரசியல் நடவடிக்கைகளில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தும் நூலாக அங்கீகரிக்கப்பட்டது. பட்டி தொட்டி எங்கும் பார்க்கக் கிடைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்” கோஷம் இதில் இடம்பெற்றிருக்கும் வாசகம்தான்.

ஒரு நல்ல மொழிபெயர்ப்புக்கான கடுமையான உழைப்புக்கு உதாரணமாகியிருக்கிறார் எஸ்.வி.ராஜதுரை.

“எனக்குப் பதினாறு பதினேழு வயசிருக்கும். அப்போதான் முதல் முறையா “கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைப் பார்த்தேன் (ஆங்கில நூல்). பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வானு அதுல இருந்த பல வார்த்தைகளைப் பார்த்து பீதி அடைஞ்சு அப்படியே புத்தகத்தை மூடிவெச்சுட்டேன். பின்னாடி, 1960கள்ல காசநோய் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் இருந்தப்போ, பக்கத்துல சிகிச்சைக்காக வந்திருந்த கோவை ஆலைத் தொழிலாளர்கள்ல ஒருத்தர் கொடுத்த “வீரம் விளைந்தது” புத்தகத்தைப் படிச்சப்போதான் கம்யூனிஸம் என்னை இழுக்க ஆரம்பிச்சுச்சு. தொடர்ந்து, ஜார்ஜ் பொலிட்ஸர், எமிலி பேர்ன்ஸ், கார்கி, தோல்ஸ்தோய்னு தேடித் தேடிப் படிச்சப்ப கம்யூனிஸம் புரி-பட ஆரம்பிச்சு அது மேல பற்று ஏற்பட்டுது. ஆனாலும், கம்யூனிஸத்தினுடைய திறவுகோலா எல்லோராலும் மதிக்கப்படுற “கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை”யை மட்டும் முழுசாப் புரிஞ்சுக்க முடியலை. இந்த நிலைமை ரொம்ப நாள் நீடிச்சுது.

ஆங்கிலம் - தமிழ் இரண்டிலேயுமே இந்தப் புரிபடா சிக்கலை நான் உணர்ந்தேன். அதனால, விரி-வான விளக்கவுரைகளுடன் கூடிய “கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை”யோட பதிப்பு எங்கேயாவது கிடைக்குமானு ரொம்ப நாள் தேடிக்கிட்டு இருந்தேன். 15 வருஷங்களுக்கு முன் தோழர் ச.சீ.கண்ணன் கொடுத்த டேவிட் ரையாஸானோவ் எழுதின ஆங்கிலப் பதிப்பு என்னுடைய தேவையைப் பூர்த்திசெய்தது. மார்க்ஸ், ஏங்கெல்ஸோட மூலப் படைப்புகளை ஜேர்மனியிலிருந்து திரட்டிக்கொண்டுவந்து, ரஷ்யாவில் வெளியிட்டதோடு ஆங்கிலம் உள்பட பல மொழிகளுக்கு அது போய்ச் சேரவும் உதவினவர் இவர். ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு, மொஸ்கோவில் நிறுவப்பட்ட மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் நிறுவனத்தின் இயக்குநராக இருந்தவர்.

நாம உருவாக்கணும்னு நெனைக்கிற சமூகத்தை அமைக்கிறதுக்கான வழிகாட்டியா இருக்குற நூலைத் தமிழ்லேயும் இப்படி விரிவா கொண்டுவரணும்கிறது அப்போ முடிவுசெஞ்சது. அது சாத்தியமாக இவ்வளவு காலம் ஆகியிருக்கு. அதுவும் நாளுக்கு நாள் கண் பார்வை மங்கிக்கிட்டே இருக்குற சூழல்ல அது முழுசா போயிடுறதுக்குள்ள செஞ்சுடணும்கிற உந்துதல்ல முடிச்சது.

ஆங்கிலத்திலும் ஜேர்மனிலும் பல்வேறு பதிப்புகளைப் பார்த்து செய்த ஒப்பிடுதல்களில் ஆரம்பிச்சு சர்வதேச அளவுல முக்கியமான சில மார்க்ஸிய அறிஞர்கள், ஜேர்மானிய அறிஞர்களுடைய உதவி வரைக்குமா சேர்ந்து பழைய மொழியாக்கத்துல இருந்த புரிபடா பிரச்சினையைத் தீர்த்திருக்கு. தவறான புரிதலால், “ஐரோப்பிய மையவாத பார்வையை வெளிப்படுத்துற நூல்”னு சொல்லப்பட்டவங்களோட குற்றச்சாட்டை மறுத்து, “இது உலகப் பார்வையைக் கொண்ட நூல்”னும் இந்த மொழிபெயர்ப்பு நிறுவுது.

இதுக்கு முன்னாடி தமிழ்ல வெளியான மொழிபெயர்ப்புகளை நான் குறை சொல்ல மாட்டேன். அந்தக் காலச் சூழல், அவங்களுக்கு முன்னாடி இருந்த வாய்ப்புகள் அப்படி. இன்னும் சொல்லணும்னா, அவங்க அத்தனை பேர் தோள்லேயும் ஏறி நின்னுதான் இதைச் செஞ்சிருக்கேன்னு சொல்லணும்.

உலக அளவுல முக்கியமான ஒரு புத்தகத்தைத் தமிழ்ல முழுமையா, விரிவா கொண்டுவந்துட்டோம்கிற மன நிறைவு ஒருபக்கம் இருந்தாலும், நாம வெளியிலேர்ந்து கொண்டுவந்து சேர்க்க வேண்டிய படைப்புகள் இன்னும் கடலளவு இருக்கேங்கிற கடமையும் நாம இருக்குற உடல்நிலை எதுவரைக்கும் அனுமதிக்கும்கிற

# வரணியின் அமைவிடமும் அதன் சிறப்புக்களும்



பாடசாலை மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள்

இந்திய உபகண்டத்திற்கு தெற்கே உள்ள இலங்கைத் திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. அப் பிரதேசத்தில் சமய வாழ்வியலும் கல்வியும் சிறப்பாக உள்ள இடமாக தென்மராட்சி விளங்குகின்றது. தென்மராட்சியில் கொடிகாமத்திலிருந்து வடக்காக 2 கி.மீற்றர் தூரத்தில் வரணிப்பிரதேசம் அமைந்துள்ளது. இதன் எல்லைகளாக வடக்கே முள்ளி கடல் நீரேரியும் கிழக்கே மிருசுவில் கழிக்கரையும் தெற்கே கொடிகாம மின்கலமும் மேற்கே கரவெட்டியும் கபபூது கடல் நீரேரியும் சுற்றிக் காணப் படுகின்றன. இப்பிரதேசத்தின் கீழ் 14 கிராமங்கள் உள்ளன. பண்டைக் காலத்தில் இயற்கையழகும் குடியிருப புக்களாலும் ஏனைய பிரதேசங்களை விட வர்ணிக்கக்கூடிய வகையில் இப்பிர தேசம் காணப்பட்டமையால் வரணி varany என அழைத்தமை குறிப்பிடத் தக்க அம்சமாகும். மேலும் வரணி என்பது மாவிலங்கம் என்ற ஒரு மரவகை வரணி என்பதன் திரிபே வரணி எனக்கொண்டு செழிப்பான பூமி என்ற நிலையில் இவவிடம் பெயர்பெற்றுள்ளது என்பார்கள். பண்டைக்காலத்தில் பல பிராமணக குடியிருப்புக்கள் நிறைந்து வாழ்ந் தமையின் அடிப்படையில் வரணி என்ற பெயர் ஏற்பட்டிருக்க லாம் என முன்னோர்கள் கூறுவது முக்கியமானதாகும். இன்றும் இப்பிரதேசத்தில் உள்ள வெங்கிராயன தீனிக்கிராய் தாவளம் போன்ற இடங்கள் முக்கியம் பெறுவதைக் காணலாம்.

வெளிநாட்டு தொடர்பும் வாய்ப் பும வரணிப் பிரதேச மக்களின் பொரு ளாதாரத்தையும். வாழ்க்கை அந்தஸ்தை யும் உயர்வடையச் செய்தன. இவ் வாறு புலம்பெயர் உறவுகள் ஒன்று பட்டு ஒற்றுமையாக செயற்பட்டு வரணிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகளை முன் னெடுத்தால் பழம் பெரும் வர லாற்றுப் பெருமைகளைப் பேணுவ துடன் வளரும் தலைமுறையினை முன்னேற்றப்பாதையில் வழிகாட்ட முடியும். வரணிப்பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டம்சங்கள் பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப் பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரி மையாக பெற்ற நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுதி எனக்கொள்ளலலாம்.

எமது வரணிப் பண்பாட்டில் நாச்சார வீடுகள் பல இருந்துள்ளன. இன்று நவீன மாற்றத்தால் பல வீடுகள் மாற்றத்துக்கு உள்ளாகியுள் ளன. பிள்ளைகளுக்கு நாச்சார வீடு கள் பற்றித் தெரியாத நிலை உள்ளது. சமூக நோக்கில் கிணறு சுமைதாங்கி ஆவுரஞ்சிகல் என்பன கட்டப்பட்டன. வயல்வெளி குளங்களுக்கு அண்மை யில் மாடுகள் தினவெடுக்கவென இவை முன்னோர்களால் கட்டப்பட்டு பேணப்பட்டு வந்தது. இவை பற்றி யாரும் இன்று அக்கறையற்று இருப் பது கவனிக்கத்தக்கது. தமது அன்றா டப் பாவனையில் புழங்குபொருட்க ளாக பெட்டகம் மூக்குப்பேணி காசாண்டி... போன்றன இருந்துள்ளது. இவை பற்றிய சொற்பதங்கள் இன்று அருகி விட்டன. இன்று விஞ்ஞான ஆரர்ய்ச்சிகள் பித்தளைப் பாத்திரங் களின் மருத்துவ உண்மைகளை ஏறறுள்ளன. அதனை எம் முன்னோர் உணர்ந்து வரணியில் செயலாற்றி யுள்ளனர்.

நம்பிக்கையில் வரணிப்பிரதேச மக்கள் அக்கறையுடையவர்களாக இருந்துள்ளனர். நாவுறு பார்த்தல் மருந்து பிழிதல் பார்வை பார்த்தல் தண்ணீர் ஓதுதல், ஏக்கத்திற்கு பார்த்த தல மாந்திரீக ரீதியான மருந்து விழுத் தல். போன்றவற்றை கடைப்பிடித் துள்ளனர். இன்று பல வழக்கிழந்து சென்றாலும் பாட்டிமார் உள்ள வீடு களில் இவை நடைபெற்று வரு வதைக் காணலாம். பரிவட்டம் காணல, பல்லி விழும் பலன், தும் மல், பல்லி சொல்லும் பலன், முழு வியளம் பார்த்தல், காகம் கரைதல், மூன்றாம் பிறை பார்த்தல் போன்ற வற்றில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்துள்ளனர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் பின் இன்று சகலரும்முன்னோரின் நம்பிக் கையினை ஏற்று செயறபடத் தொடங்கியுள்ளமை சிறப்பானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

வரணியில் வாழ்ந்த முன்னோர் கள் கூட்டு வாழ்வு கூட்டாக தொழில் செய்து நோய் நொடி இன்றி நீண்ட ஆயுள் பெற்று ஒற்றுமையாக வாழ்ந்தனர். மாடுகள் மேய்த்தல், வீடு வேய்தல், குளம் வெட்டுதல் போன்றன குறிப்பிடத் தக்கவை. புத்தாண்டு பிறந்தால் கிளித்தட்டு விளையாடும் பழக்கம் இளைஞர்களுக்கு உற்சாக மூட்டுவதாகும் தற்போது இவ்வாறான பாரம்பரியங்கள் பேணப்படுவது மருவி வரும் நிலை இருப்பதைக் காணலாம். தற்போது இப்பிரதேசத் தில் வழிபாடுகள், திருவிழாக்கள், சடங்குகள், நம்பிக்கைகள் தொன்று தொட்டு பேணப்பட்டு வருகிறது.



வரணி மகா வித்தியாலய நிகழ்வு



கிராமிய நிகழ்வுகள்

இவ்வாறாக நோக்கும் போது வரணி வரலாற்றுச் சிறப்புமிக்க கிராம மாகும். அத்தகு சிறப்பான புண்ணிய பூமியில் பிறந்தவர்களும் அதனை புகுந்த இடமாக கொண்டவர்களும் புண்ணியவான்களே. இவர்கள் எவ்விடத்தில் வாழ்ந்தாலும் எங்கு சென்று வசித்தாலும் வரணியின் பண்பாட்டையும் வாழ்வியலையும் நம்பிக்கைகளையும் கல்விச்சிந்தனை களையும் பேணிப் பாதுகாப்பது அவசியமாகும். நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு... என்ற வாக்கிற்கேற்ப வாழ்ந்து பயனடைவோம். பிறர் வாழ வழிகாட்டுவோம். என்பதனை மனதிலிருத்துவோம்.

*நன்மையை செய்!*
*பலனை எதிர்பாராதே!!.*





# வடமராட்சியில் மது,புகையிலை விற்பனை ஒப்பீட்டளவில் கடந்தவருடம் குறைவு

## மதுவரித் திணைக்களம் தகவல்

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசத்தில் சட்டவிரோதமான மது மற்றும் புகையிலைப் பொருட்களின் விற்பனையில் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டு 48 ஆக குறைந்துள்ளதாக பருத்தித்துறை மது வரித் திணைக்கள புள்ளி விபரவியல் தகவல் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினால் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு சார் நடவடிக்கைகள் மூலமே 2013 ஆம் ஆண்டு சட்டவிரோத மது மற்றும் புகையிலை விற்பனை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் இத் திணைககளம் மதுபாவனை விற்பனையில் ஈடுபடும் கிராமங்களை இனம கண்டு கிராமசேவையாளர் பிரிவுகளூடாக சட்ட விரோத மது பாவனையினால் ஏற்படும் சமூக பொருளாதார நெருக்கடிகள் பாதிப்புக்கள் தொடர்பிலும் தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எமது நாட்டின் எதிர்கால தலைவர்களாக விளங்கும் சிறார்களை மையமாக கொண்டும் பாடசாலைகள் கிராம மட்டங்களிலும் கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றது.

2012 ஆம் ஆண்டு 377 நபர்களுக்கெதிராக நீதிமன்று சுமார் 13 இலட்சம் ரூபா அபராதமாக விதித்துள்ளன. கடந்த 2013 ஆம் ஆண்டு 329 நபர்களுக்கெதிராக 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை நீதிமன்று அபராதமாக விதித்ததுடன் 48 ஆக சட்ட விரோத மது விற்பனைகள் குறைவடைந்துள்ளதாகவும புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதிலும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான கால இடைவெளிகளுக்குள் 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலைப் பொருட்களை விற்பனை செய்த 72 நபருக்கெதிராகவும் சட்ட விரோதமாககள் வைத்திருந்து விற்பனை செய்த 246 நபர்களுக்கெதிராகவும் அரச சாராயத்தை அனுமதியினறி வைத்திருந்து விற்பனையில் ஈடுபட்ட 8 நபர்களுக்கெதிராவும் மற்றும் ஏனைய சட்ட விரோத மது விற்பனையில் ஈடுபட்ட 3 நபர்களுக்கு எதிராகவும் நீதிமன்று சட்டநடவடிக்கை எடுத்து 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறபபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால சந்ததியினரின் சொத்தையும் வாழ்வையும் சிதைக்க எவரும் துணைபோக வேண்டாம். அதற்கு அனைவரும ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பருத்தித்துறை மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (116)



டென்மார்க் சாயிராம் அம்மன் ஆலய உபசயித் தாயாரின் அருளொளி தர்சன மாலை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது உயரப்புலம் டெ.மி.வித்தியாலய மாணவர்கள் நாற்பது பேருக்கு கற்றல் உபகரணங்கள் உடுபிடவைகள் வழங்கப்பட்டன இதில் வித்தியாலய அதிபர் ஆசிரியர்களுடன் மாணவர்கள் நிற்பதைக் காணலாம் (137)

வெள்ளி நற்சிந்தனை...

## பௌத்த மதம் என்ன சொல்கிறது

கடவுளின் பத்து அவதாரங்களில் ஒரு அவதாரமாகச் சிலர் கௌதமபுத்தரைக் கருதுகிறார்கள். இந்துமதக் கோட்பாடுகளை புத்தமதம் ஜீரணித்து தன்னுடையதாக்கிக் கொண்டு விட்டது. புத்தமதத்தின் முக்கிய கொள்கையான அகிம்சை மகாபாரதக் கதையில் சிறப்பான இடம் வகிக்கின்றது.

புத்த மதத்தின் செல்வாக்கிற்குக் காரணம் புத்தரின் ஒழுக்கமும் அவர் உயிர்களிடம் காட்டிய இரக்கமும் தான். புத்தரின் போதனைகள் அவருடைய தத்துவமாகவும் அவர் உபதேசித்த ஒழுக்க நெறிகளாகவும் அவரது சம்பாசனைகளாகவும் மூன்று தலைப்புகளில் போற்றப்பட்டு வருகின்றனை

பௌத்தர்களுக்கான மத நூல் தம்மபதம் என்று அழைக்கப்படுகின்றது. உலக மதமான புத்தமதம் ஹியானா மஹாயான என்று இரண்டு பிரிவுகளைக் கொண்டது ஹியாயான மதத்தில் புத்தர் மனித இனத்தைச் சரிவிலிருந்து காப்பாற்ற வந்த சீர்திருத்காரராகவும் விமோசனைத்தைப் போதித்த ஞானியாகவும் கருதப்படுகிறார் மஹாயான புத்தமதம் புத்தரைக் கடவுளாகவே ஏற்றுக்கொண்டு வழிபடுகின்றது இதனுடைய நூல்கள் எல்லாம் சமஸ்கிருத மொழியில் இருக்கின்றன.

ஜப்பானில் நிலவிடும் புத்தமதம் "ஜென் பௌத்தம்" என்று அழைக்கப்படுகின்றது அறிவாளிகள் இதற்கு மிகவும் ஆதரவு காட்டுகிறார்கள் இதற்கு அடிப்படை தியானம் தான் இவர்கள் சாஸ்திரங்களை நம்புவதில்லை தியானத்தின் மூலமாகத்தான் விமோசனம் பெற முடியும் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

புத்தரின் பஞ்சசீலக் கொள்கைகளும் மத சார்பற்ற கோட்பாடுகளும் இந்திய அரசியல் எண்ணத்தில்இப்போது ஆதிக்கம் செலுத்தி வருகின்றன புத்தர் பிறந்த இந்திய மண்ணில் பௌத்தம் அவ்வளவாக வளர்ச்சி பெறவில்லை இந்து மதத்தின் கிளையாகவே பௌத்தம் கருதப்படுகிறது

பௌத்த மதத்தில் கூறப்பட்டவை யாவும் இந்து மதத்திலிருந்து பெறப்பட்டவைதான் ஆசையை அறுத்தல் எல்லா உயிர்களிடதிலும் அன்பு வைத்தல், உயிர்களைக் கொல்லாதிருத்தல் என்பவை என்றும் எக்காலத்திற்கும் உரிய கோட்பாடுகளாகும் இந்தக் கருத்துக்களை கௌதமபுத்தர் சிறப்பாக எடுத்துக் கூறினார் வாழ்ந்து காட்டினார் இதனால் புத்தர் மக்கள் மனதில் இடம்பிடித்தார் புத்தரினால் உருவாக்கப்பட்ட மதத்தை நம்புவார்கள் அதைக் கடைப்பிடிப்பவர்கள் புத்தரின் போதனையை சரியாகப் பயன்படுத்தினால் அன்புமயமான உலகைக் காணலாம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

## பதிவிறக்கப் பெட்டகம்

எழுத்து மூலம் உண்மையை அடைதல் பற்றி உங்கள் பார்வை என்ன?

உண்மையை அடைவதற்கு ஒரே வழி மௌனம்தான். எல்லா மார்க்கங்களும் அகந்தையின் பரிபூர்ணமான அடககத்தை – ஒடுக்கத்தைத்தான் இந்த மௌனத்துக்கு முக்கியமான ஆதாரமாக்குகின்றன. சரி, எழுதுவது இநத அகந்தையின் ஒடுக்கத்தைச் சாதித்துவிடுமா? ஒணணரைக் கவிதையை எழுதி அதை அச்சில்வரப் பார்த்து விட்ட கவிஞர்களுக்கு அகந்தை எகிறிக் குதிப்பதுதான் தெரிகிறது. பெரிய கவிஞர்களையோ எழுத்தாளர்களையோ எடுத்துக் கொண்டால் அவர்களிடமும் பலரிடத்தில் அகந்தை நாசூக்காகக் கொலுவீற்றிருக்கக் காணலாம். எனவே, கவிதை மூலம், எழுத்து மூலம் உண்மையை அடைதல் என்பது எனக்கு அபத்தமான கூற்றாகவே தோன்றுகிறது. ஆனால் எழுதும் போது நேர்மையும் மனஒருமையும் உள்ள ஒருவன் தனது எழுத்தின் மூலம் வெளிப்படுகிறவற்றை – அதாவது தன்னை – அவதானிக்க ஒரு சாத்தியம் உண்டு. மனதின் களேபரமான ஓட்டத்தைச் சீராக்கும் வேலைக்குக் கூட எழுதுதல் ஒரு சாதனமாகும். (ஒவ்வொருவரும் காலை யில் சில பக்கங்கள் எதையாவது எழுதி வருவது அன்றாட மனோவாழ்வைத் தெளிவுபடுத்த உதவும்.) இருந்தும் உண்மைத் தேட்டத்தைப் பொறுத்தவரை இது எல்லாம் வெறு அ, ஆ தான். மிக மேலோட்டமான பயிற்சிதான்.

– பிரமிள்

பொதுவாக சமூகத்தில் வயதில் பெரியவர்கள்தான் இளைஞர்களை பார்த்து விழுமியங்களை கைவிட்டுவிடாதீர்கள் என்று பேசுவார்கள். அல்லது அப்படி பேசுவது தான் முறை என்று இன்றும் நம்பப்படுகிறது. ஆனால் தமிழ் இலக்கியத்துறையில் மட்டும்தான் இளைய எழுத்தாளர்கள் மூத்த எழுத்தாளர்களையும் பதிப்பாளர்களையும் நோககி விழுமியங்களை கைவிட்டுவிடாதீர்கள் என்று கெஞ்சுகிறார் கள். இந்த விழுமியங்களை யாரோ சிலர் மிகவும் கஷ்டப்பட்டு உருவாக்கியிருக்காவிட்டால் பின்தொடரும் நிழலின் குரல் எழுதப்பட்டிருக்காது, நெடுங்குருதி எழுதப்பட்டிருக்காது. அதற்கான சூழலே இருந்திருக்காது. சிற்றிதழ்கள் தோனறியிருக்காது. எல்லா தொழில்களிலும் அது போதுமான மக்கள் கவனத்தை பெறாவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக அந்த தொழில் தன்னை உருமாற்றி கொள்ளும். இலக்கியத் தில் கலையில் மட்டும்தான் யார் கண்டுகொள்ளாவிட்டாலும் நான் செய்வதை செய்வேன் எனற நிலை எப்போதும் இருக்கிறது. "இவர்கள் பார்வையில் நான் பட்டுத் தெறிக்கவேண்டும் என்ற அவசியம்" எனறார் நகுலன். இல்லாவிட்டால் ஒரு இளம் எழுத்தாளர் எதற்காக ஐநூறு பக்க நாவலையோ யாரும் படிக்காத கவிதைத் தொகுப்பையோ கொண்டுவருவதற்கு ஒரு வருடம் இரண்டு வருடம் என்று உழைக்கவேண்டும். அதற்குப் பதிலாக தான் ஊதியத்திற்காக வேலை செய்யும் துறையில் கவனம் செலுத்தி நன்றாக சம்பாதித்து நிம்மதியாக வாழ்ந்துவிடலாமே. இன்றும் ஆச்சர்யமாக இளைய எழுத்தாளர்களிடம் இந்த விழுமியஙகளும் அது உருவாக்கும் பித்தநிலையும் தொடர்கிறது. சிவராம காரந்த்தின் வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர் பித்த னின் பத்து முகங்கள்!. அந்த பித்தநிலையே எழுத்துக்கான உந்துசக்தி.

– சர்வோத்தமன் சடகோபன்

ஆபத்துகளை மேற்கொள்ளாமலும் சுயதியாகத்தைச் செய்யாமலும் கலை என்பதைச் சிந்தித்துப் பார்க்கவே முடியாது, சுதந்திரமும் கற்பனையின் துணிச்சலும் நடைமுறையிலேயே சாதிக்கப்பட வேண்டும்.

– போரிஸ் பாஸ்டர்நாக்

ஒனறுக்கொன்று தொடர்பற்றது போல தோற்றமளிக்கும் விஷயங்கள் அடுத்தடுத்து அடுக்கப்படுவதாலேயே தொடர்புறுத்தப்படுவதால் – தொடர்புறுத்துதல்கள் கவிதையாக்கப்படுகின்றன அல்லது புனைவாக்கம் பெறுகின்றன. உதாரணமாக "ராஜா இறந்தபின் ராணி இறந்தாள்" என்பது வெறும் செய்தியைச் சொல்லக்கூடிய வாக்கியம். "ராஜா இறந்த பின் துக்கம் தாளாமல் ராணி இறந்தாள்" என்ற வாக்கி யமோ இரண்டு அடுத்தடுத்து நடந்த சம்பவங்களிடையே உணர்ச்சிபூர்வமான காரண காரியத் தொடர்ச்சியை ஏற்படுத்தி செய்திக்கு கதைக்களனை (plot) தருகிறது அதன் மூலம் சொல்லல்கள் அல்லது மொழிபுகளில் ஒரு வகையான கதை சொல்ல லையும் நிகழ்த்துகிறது.

– எம்.டி.முத்துக்குமாரசாமி

# பாரம்பரிய இசைக்கருவிகள் கைப்பணிக் கிராமம் திறப்பு

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் உடு நுவர பிரதேச செயலக பிரிவிலுள்ள சூரகல கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பாரம்பரிய இசைக்கருவிகள் கைப்பணிக் கிராமம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள தேசிய அருங்கலைகள் பேரவையினால் தேசிய வடிவமைப்பு சபையின் ஒத்துழைப்புகளுடன் இக்கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

35 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கிராமத்தில் கண்காட்சி மற்றும் விற்பனைக்கூடம், கைப்பணியாளர்களுக்கான வேலைத்தளங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

இதன்போது கைப்பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள், மூலப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டதுடன் இக்



கைப்பணித்துறை சார்ந்த பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க மத்திய மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபைத் தலைவர் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அமைச்சின் அதிகாரிகள் கைப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற நேரடி ஒளிபரப்பு; சபாநாயகர் நாடு திரும்பியதும் இறுதி முடிவு

## பிரதி சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகள் பரீட்சார்த்தமாகவே தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பப்பட்டதாகவும் தொடர்ந்து அதனை ஒளிபரப்புவது குறித்து சபாநாயகர் நாடு திரும்பிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்தமாக காண்பிக்கப்பட்ட நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது குறித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தவறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

நாடாளுமன்ற வாகன தரிப்பிடத்தில் தொடர்ந்து பாரிய திரையில் நேரடி ஒளிபரப்பு இடம்பெறுகிறது. பியோ தொலைக்காட்சியுடன் இணைந்து பரீட்சார்த்தமாக வரவு செலவுத் திட்ட விவாதங்கள் காண்பிக்கப்பட்டன.

இது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கும் பியோ தொலைக்



காட்சிக்குமிடையில் எதுவித உடன்பாடும் எட்டப்பட்டிருக்கவில்லை. பரீட்சார்த்த ஒளிபரப்பிற்காக நாடாளுமன்றத்துக்கு எதுவித செலவும் ஏற்படவில்லை.நேரடி ஒளிபரப்பு செய்யும் சபாநாயகரின் முயற்சியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்க வேண்டும். நேரடி ஒளிபரப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள், யோசனைகள் காணப்படுகின்றன.

பரீட்சார்த்த ஒளிபரப்பின் பிரதிபலன்களை கருத்திற்கொண்டு கட்சித் தலைவர்களுடனும் பேசி இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார்.

# ஆலோசனைப் பத்திரம் விரைவில் வெளியீடு

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைகளில், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது கையாள வேண்டிய முறைமைகள் தொடர்பில் ஆலோசனைப் பத்திரம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்தத் தகவலை, கல்வியமைச்சின் செயலாளர் அனுர திசநாயக்க வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான ஆலோசனைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தும் போது முகங்கொடுக்கின்ற இன்னல்களை தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடங்களில் வலுவிழந்தோருக்கு வசதிகள்

(யாழ்ப்பாணம்)

புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து கட்டடங்களிலும் வலுவிழந்தோர்கள் உட்பிரவேசிக்கக் கூடியதான வசதிகளை 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் செய்து கொடுத்தல் கட்டாயமானதென சமூக சேவை கள அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபம் நாடெங்குமுள்ள அரச,தனியார் கட்டடங்கள், பிரபல்யமான இடங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் இடங்களுக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை இமெல்டா சுகுமாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலுவிழந்த நபர்களுக்கு உட்பிரவேசிப்பு வசதிகளை வழங்குதல் தொடர்பாக 2006 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி 1467/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலமாக விடுக்கப்பட்ட அறிவித்தல் திருத்தப்பட்டு 1619/24 என்ற இலக்கத்தில் 2009. 09.18 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக கட்டாயமானதாக கூறப்பட்டுள்ளது.

இதன்படி புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து கட்டிடங்களிலும் அங்கவீனமுற்றவர்கள் உட்பிரவே சிக்கக் கூடியதாக வசதி ஏற்படுத்தப்படல் கட்டாயமானதாகும்.

அங்கவீனமுற்ற நபர்களின் அமைப்பு உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு இலக்கம் கு.க 221/2009 இற்கமைய 2013.06.17 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் 2014.10.16 ஆம் திகதிக்கு முன்னர் உட்பிரவேசிக்கும் வசதி ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

அவ்வாறு ஏற்படுத்த தவறுமிடத்து அக் கட்டடங்களை நிர்வகிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார் என அச்சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(90)

# ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகத்தின் தலைமையில் மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்ட கல்வி வரலாறு எனும் தலைப்பில் உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாசும், கிளிநொச்சி மாவட்ட சிறுகதை இலக்கியப் போக்கு எனும் தலைப்பில் பாரதிபுரம் மகாவித்தியாலய அதிபர் பெ.கணேசனும், கிளிநொச்சி மாவட்ட நாவல் இலக்கியம் எனும் தலைப்பில் உதவிக் கல்விப்பணிப்பாளர் சிறிக்குமாரனும்,கிளிநொச்சி மாவட்ட பாரம்பரிய நாடக வரலாறு எனும் தலைப்பில் ச.யேசுதாசனும்,கிளிநொச்சி மாவட்ட நாட்டார் வழக்காற்றியல் எனும் தலைப்பில் காவேரி கலாமன்ற இயக்குநர் வண பிதா ஜோசுவா அடிகளாரும், கிளிநொச்சி மாவட்ட நவீன நாடக வரலாறு எனும் தலைப்பில் உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.விந்தனும், பூநகரி பிரதேச தொன்மைக் கல்வி வரலாறு எனும் தலைப்பில் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் கா.குலசேகரமும் கிளிநொச்சி மாவட்ட வழக் கங்களும் வழமைகளும் எனும் தலைப்பில் ஆசிரியை திருமதி இ.செல்வநாயகியும், கண்டாவளை பிரதேச மக்களின் பண்பாட்டு விழுமியங்கள் எனும்தலைப்பில் கண்டாவளை கலாசார உத்தியோகத்தர் க.அமலதாசும் பூநகரி பிரதேச நீர்வளம் எனும் தலைப்பில் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் கா.குல சேகரமும் நிகழ்த்தவுள்ளனர்.

நன்றியுரையை கலாசார அபிவிருத்தி அலுவலர் செல்வி வி.கார்த்திகா நிகழ்த்தவுள்ளார்.

(90)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 100 சைக்கிள்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு யுனிசெவ் நிறுவனத்தினால் 100 சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று,பாண்டியன் குளம், துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மணலாறு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கே இந்தச் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.


இந் நிகழ்வு மாங்குளம் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.






கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூகநிலையத்தின் மாதர்சங்கத்தின் ஏற்பாட்டில் கைதடி மேற்கு கிராமத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்களுக்கு நடாத்தப்பட்ட பொங்கல் விழாவினைக் காணலாம். (51, 90)

30) ஒரு கோலத்தை ஆக்குவதற்கு ▯ ஐ ஒரு தடவையும் ○ ஐ இரண்டு தடவையும் △ ஐ மூன்று தடவையும் ▭ ஐ நான்கு தடவையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உருவை தெரிவு செய்க.




31) சதுரமுகி ஒன்றின் ஒரு முகத்தின் பரப்பளவு 9 சதுரசென்ரி மீற்றர் எனின் எல்லா முகங்களினதும் மொத்தப் பரப்பளவு யாது?
1) $81cm^2$    2) $54cm^2$    3) $36cm^2$

32) 'உங்களை பற்றிய விபரங்களை கூறுங்கள்' இவ்வாக்கியம்.
1) தகவல்களை பரிமாறுதல்    2) தகவல்களை பெறுதல்    3) தகவல்களை வழங்குதல்

33) 
உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1) 4    2) 3    3) 6


34) சம அளவான ஆறு கம்பிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட உரு எது?



35) ஏழைமாணவர்களுக்கு அரசு புலமைப்பரிசில் வழங்கி கைதூக்கிவிட்டது. கைதூக்கிவிட்டது என்பது.
1) கையை கொடுத்து தூக்குதல்
2) மேலும் கற்பதற்கு வசதி அளித்தல்
3) பணம் கொடுத்தல்

36) சுறுசுறுப்பான, அழகான, விவேகமான என்னும் அடைமொழிகள் பயன்படுத்தக்கூடிய சொல் எது?
1) பூ    2) சிறுமி    3) எறும்பு

37) ஆறாயிரத்து முந்நூற்று அறுபது என்பதை குறிக்கும் குறியீட்டை தெரிவு செய்க.



38) நீலனிடம் சம அளவான 84 ஈர்க்குத் துண்டுகள் உள்ளன. அவன் அவற்றை பயன்படுத்தி அமைக்கக் கூடிய சதுரமுகிகள் எத்தனை?
1) 7    2) 9    3) 6

❖ 39ஆம், 40 வினாக்களில் உள்ள வாக்கியங்களை உரிய முறையில் பிரித்து எழுதுக.

39) பண்டைக்காலமக் கள்மெழு கையும் தேனையும் சேகரித்தனர்.

40) அவன்பிறரி டம்புத்த கங்களைவாங்கிப் படிப்பான்

.................................................................................

**வினாவிற்குரிய விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. 2 | 08. 3 | 15. 2 | 22. ஒருவர் | 29. 1 | 36. 2 |
| 02. 1 | 09. வ | 16. 1 | 23. 5பேர் | 30. 1 | 37. 2 |
| 03. 3 | 10. 2 | 17. வா | 24. 4 பேர் | 31. 2 | 38. 1 |
| 04. 1 | 11. 2 | 18. நான் | 25. 1 | 32. 2 | 39. பண்டைக்கால மக்கள் மெழுகையும் தேனையும் சேகரித்தனர். |
| 05. 3 | 12. 3 | 19. 3 | 26. 1 | 33. 1 | |
| 06. 2 | 13. 3 | 20. 1 | 27. 1 | 34. 1 | |
| 07. 1 | 14. 2 | 21. 3 | 28. 3 | 35. 2 | 40. அவன் பிறரிடம் புத்தகங்களை வாங்கிப் படிப்பான். |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 05





❖ கீழே தரப்பட்ட ஒவ்வொரு வாக்கியங்களினதும் கருத்து பிழையாவதற்கு காரணத்தை தந்துள்ள விடைகளில் இருந்து தெரிந்து கோடிடுக.


01) பத்துவயது மாணவனான ராமன் தரம் எட்டில் படிக்கின்றான்.
1) ராமன் மாணவனாக இருக்கமுடியாது.
2) பத்து வயது உடைய ராமன் எட்டாம் தரத்தில் படிக்க முடியாது.
3) ராமன் பத்து வயது உடையவனாக இருக்க முடியாது.

02) எனது தந்தை பலாலி விமான நிலையத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்டார்.
1) சர்வதேச விமான நிலையம் பலாலியில் இல்லை
2) பலாலியில் விமான நிலையம் இல்லை
3) எனது தந்தை லண்டன் செல்லமுடியாது


03) உருவில் இடைவெளிக்கு வரவேண்டிய பகுதியை தெரிவு செய்க.




04)  தரப்பட்ட உரு வரிசையில் 49 அமையும் உரு எது?
1) ⬠    2) ☒    3) ⇨

05) 
நூ ப ஒ
தரப்பட்ட எண்சட்டம் குறிக்கும் பெறுமானம் யாது?
1) 301    2) 123    3) 103

06) நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்




1) $\frac{2}{4}$    2) $\frac{2}{6}$    3) $\frac{2}{5}$

07) 
இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1) 16    2) 15    3) 14


08) சீருடை அணிந்து கடமையில் ஈடுபடும் அரச பணியாளர்களின் தொகுதியை தெரிவு செய்க.
1) ஆசிரியர்கள், நீதிபதி, சாரதி
2) முகாமையாளர், காவலாளி, அதிபர்
3) தாதிகள், பொலிஸார், இராணுவத்தினர்


09) இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளை கொண்ட தொகுதி எது?
1) மகாவலி, களனி, குமுக்கன்யா
2) பம்பரகந்த, லக்ஷபான, தியலும
3) ரத்தெனியகல, விக்டோரியா, கல்ஓயா

10)  படத்தில் காணப்படும் நிகழ்ச்சியை பெரும்பாலும் எந்த மாதத்தில் காணமுடியும்.
1) ஜனவரி 2) ஏப்ரல் 3) டிசம்பர்



11)  தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டுவதால் பெறப்படும் சதுரமுகியை தெரிவு செய்க.



12) 

தரப்பட்ட தாயக்கட்டையை செய்யப்பயன்படுத்தப்பட்ட வெட்டுருவை தெரிவு செய்க.



13) தொழிற்சாலை எனப்படுவது.
1) பொருட்களை விற்பனை செய்யுமிடம்
2) பொருட்களை களஞ்சியப்படுத்தும் இடம்
3) பொருட்களை உற்பத்தி செய்யுமிடம்

14)  கடதாசி ஒன்று இரண்டாக மடிக்கப்பட்டு படத்தில் காட்டப்படும் முறி கோடுகள் வழியே வெட்டி அகற்றினால் கிடைக்கும் வடிவை தெரிவு செய்க.



15) 6 பேர் 6 நாட்களில் செய்யக்கூடிய வேலையை 9 பேர் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?
1) 9 நாட்கள் 2) 4 நாட்கள் 3) 6 நாட்கள்

16) 2kg 350g + ☐ = 5kg 150g வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய விடை.
1) 2kg 800g 2) 2kg 200g 3) 3kg 150g

❖ **17ஆம், 18ஆம் வினாக்களுக்கு அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படுக**

17)
| |
|---|
| நீலவானக் கடலுக்குள்ளே<br>நிலவே நீந்திவா - நீ<br>நீந்தி வரும் போது வைரம்<br>நிறைய அள்ளி வா |

இப்பாடல் கடலை பற்றி பாடுகிறது எனின் நீ என்னும் சொல்லை சுற்றி வட்டமிடுக நிலவைப்பற்றி பாடுகிறது எனின் வா என்னும் சொல்லை சுற்றி வட்டமிடுக.

18)
| |
|---|
| நான் பின்னவலையில் உள்ள சரணாலயத்தில்<br>வாழ்கின்றேன். அதிக ஞாபகசக்தி உள்ள<br>மிருகமாவேன். நான் தாவர உண்ணியாவேன் |

இங்கு கூறப்படும் பிராணி யானை எனின் நான் என்னும் சொல்லின் கீழ் கோடிடுக. குதிரை எனின் அதிக என்னும் சொல்லின் கீழ் கோடிடுக.




❖ **முதலில் உள்ள சொற்களின் தொடர்பினை அறிந்து அடுத்த சொல்லுடன் தொடர்புபடக் கூடிய சொல்லின் கீழ் கோடிடுக.**

19) கடல் - மீன்கள் எனின் காடு - ..............................
1) நிலம் 2) மிருகம் 3) மரங்கள்

20) வைக்கோல் - கடதாசி எனின் இரும்பு
1) கத்தி 2) பானை 3) குடை

21) காசோலை - வங்கி எனின் காசுக்கட்டளை
1) நீதிமன்றம் 2) பிரதேசசெயலகம் 3) தபாலகம்

◆ **சில மாணவர்கள் விரும்புகின்ற பாடங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**





22) ஆங்கிலம் மட்டும் விருப்பமானவர்களின் எண்ணிக்கை யாது? ..............................

23) தமிழையும், கணிதத்தையும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்? ..............................

24) மூன்று பாடங்களையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..............................

❖ **தரப்பட்ட உருவுடன் நெருங்கிய தொடர்புடைய விடையின் கீழ் கோடிடுக.**

25)  1) தொடர்பாடல் 2) மின்சாரம் 3) சேமிப்பு

26)  1) மென்மை 2) மாலை 3) பணம்

| |
|---|
| 9 ✡ 15 = 3 ◍ 8 |

இக்கணித செய்கையில்

27) ✡ இக்குறி குறிப்பது? 1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

28) ◍ இக்குறி குறிப்பது? 1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

29) பின்வருவனவற்றுள் காலைவேளை ஒன்றில் காணமுடியாத நிகழ்ச்சி எது?
1) குவளை மலர்கள் மலர்தல்
2) சூரியன் கிழக்கு வானில் உதித்தல்
3) பறவைகள் இரைதேடிப் பறத்தல்

# வறியவர்களின் வாழ்வை மேம்படுத்த மாகாணசபைக்கு அக்கறை இல்லை

## பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்

(அச்சுவேலி)

உள்ளூராட்சி சபைகளிலும் மாகாண சபையிலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக எவ்விதமான திட்டங்களையும் வகுத்துச் செயற்படவில்லை என பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலை வரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் வாழ்வு ஒவ்வொரு நாளும் விடியும் பொழுது அன்றைய உணவிற்கான ஏக்கத்துடனேயே விடிகிறது. அதிலும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட ஏழைக் குடும்பங்களின் வாழ்வு மிகவும் துயரமானது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் வாழ்வைக் கருத்திற்கொண்டு சமுர்த்தி நிவாரணங் களை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொடுத்து வந்தார். தற்போது சமுர்த்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமாக மாற்றப்பட்டு, வறுமையை ஒழிப்பதற்காக பல திட்டங்களுடன் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

நடைமுறைச் சாத்தியமற்ற கோஷங்களையும் இனவாதத்தையும் மதவாதத்தையும் பேசி அரியாசனம் ஏறியவர்கள் உள்ளூராட்சி சபைகளிலும் மாகாண சபையிலும் அதிகாரத்தில் இருக்கின்றார்கள்.

அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தமது அரியாசனங்களைப் பயன்படுத்தவில்லை என்றார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித தலைவர் அ.சந்திர சேகரம், எதிர்க்கட்சி உறுப்பினர்களான சி.கணபதிப்பிள்ளை, இ.துஷிகரன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் இ.செந்தில்நாதன் பிரதேச உதவி இணைப்பாளர் செ.வசந்தகுமார் (முரளி) கரவெட்டி பிரதேச செயலக தலைமை முகாமையாளர் நிர்மலன், உடுப்பிட்டி வங்கி முகாமையாளர் வெ.சிறிதரன் மறறும் 12 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்நத சமுர்த்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

# இருவருக்கு சாமசிறி விருது

கிளிநொச்சி மாவட்டத்தில் சாமசிறி விருதை இருவர் மிக அண்மையில் பெற்றுக்கொண்டனர்.

அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் கடந்த ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இவ் விருது மாத்தறை பௌத்த மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையின் தலைவர் இராமசாமி புவனேந்திரன், பிரசித்த நொத்தாரிசும் திடீர்மரண விசாரணை அதிகாரியுமான த.அரியரட்ணம் ஆகியோரே இவ் விருதைப் பெற்றுக்கொண்டனர். (90)



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் ஆசிரியர் பயிற்ச்சிக்கலாசாலையில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்புக்கருத்தரங்கு நிகழ்வினைக் காணலாம். (63)

# சண்டிலிப்பாயில் 18 வயதுக்குக் குறைந்த பாடசாலை செல்லாத 18 மாணவர்கள்

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலை செல்லாத 18 வயதிலும் குறைந்த 18 மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இளவாலை, மற்றும் மாரீசன்கூடல் சாந்தை ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக பாடசாலைக்கு மாணவர்கள் செல்வதில்லை எனவும் மாணவர்கள் தொழிலுக்குச் செல்கின்றனர் எனவும் கிடைத்த தகவல்களை அடுத்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் தலைமையில் சென்ற குழுவே மேற்படி மாணவர்களை இனங்கண்டுள்ளது.

பாடசாலை செல்வதற்கு வறுமையை காரணம் காட்டி மேற்படி மாணவர்கள் பாடசாலை செல்வதை தவிர்த்து வந்துள்ளனர்.

இனங்காணப்பட்ட இவர்களில் 10 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்கள் மூவர் வேலைக்குச் சென்று வருவதும் தெரியவந்துள்ளது.

குறித்த மாணவர்கள் இனங் காணப்பட்டதை தொடர்ந்து அந்தந்த கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து குறித்த மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இத் திடீர் தேடுதலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினைச் சேர்ந்த உதவிப்பிரதேச செயலர் நே.செல்வகுமாரி, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.பத்மராஜ், வலிகாமம் கல்வி வலய செயற்றிட்ட அலுவலகர் சிவரூபன், உப்பட் சமுர்ததி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இளவாலை பொலிஸ நிலையத்தினைச் சேர்ந்த பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சுயதொழில் ஊக்குவிப்பிற்கென சமூகசேவை அமைச்சு நிதியுதவி

கிளிநொச்சி மாவட்டத்தில் தனி ஒருவரைக் குடும்பத் தலைவராகக் கொண்டுள்ளவர்களுக்கு சுயதொழில் வழங்கவென சமூக சேவைகள் அமைசசு 142 500 ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி ஒத்துழைப்பு மத்திய நிலையத்தில் நடைபெற்ற சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவையில் விண்ணப்பம் செய்திருந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு வழங்கவெனவே இந்த நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 5 பேருக்கும், கண்டாவளை, பூநகரி பிரதேச செயலகப்பிரிவுகளில் தலா 2 பேருக்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவில் ஒருவருக்கும் வழஙகவென இந்த நிதி அனுப்பி வைக்கப்பட்டு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில், சிறுவியாபாரம் போன்ற சுயதொழில் நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளவர்களுக்கே இச் சுயதொழில் நிதி பட்டது. பாடசாலை செல்லும் மாணவர்கள் உள்ள வறிய தனி ஒரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்களுக்கே இச் சுயதொழில் வழங்கப்பட்டு வருகிறது. (90)

# மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி கிழக்கு (வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 6.37 மணி முதல் 7.47 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் 11 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நடைபெறவுள்ளது.

பிரதமகுரு கொம்மாந்துறை மனோன்மணி அம்பாள் திருக்கோயில் சிவஸ்ரீ இரத்தினபால கிருஷ்ணக் குருக்கள், பிரமாணந்தோட்ட ஞானவைரவர் திருக்கோயில் சிவஸ்ரீ கனகசிவகுமாரக் குருக்கள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ யோகசம்பந்தக் குருக்கள் ஆகியோர் கும்பாபிஷேக கிரியைகளை ஆற்றவுள்ளனர். (109)

# சிறந்த பண்ணையாளர்கள் வடக்கில் கௌரவிப்பு

(அச்சுவேலி)

வடக்கு மாகாணத்தில் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் மற்றும் சிறந்த பண்ணையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் நடாத்தப்பட்ட பொங்கல் விழாவில் வைத்து பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதற்கமைய வீட்டுத் தோட்டச் செய்கையில் யாழ். மாவட்டத்தில் முதலாமிடம் இ.பத்மநாதன், இரண்டாமிடம், திருமதி மு.இராஜேஸ்வரி, மூன்றாமிடம் நாகரத்தினம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாமிடம், திருமதி ச.சித்திரம், இரண்டாமிடம், மா.நாகராசா, மூன்றாமிடம் - திருமதி த.சுகந்தினி. முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாமிடம், சு.சுதர்சன், இரண்டாமிடம், திருமதி சி.மகேஸ்வரி, மூன்றாமிடம், திருமதி வி.சாந்தகுமாரி.

வவுனியா மாவட்டத்தில் முதலாமிடம், வி.ஆ.குணரட்னா, இரண்டாமிடம், பெ.கணபதி, மூன்றாடம், ம.இராமச்சந்திரன்.

மன்னார் மாவட்டத்தில் முதலாமிடம், மு.அன்ரனி ரவீந்திரன், இரண்டாமிடம் திருமதி ஜோ.கெ.வில்லிபுஸ்பம், மூன்றாமிடம் - பொ.மணி ஆகியோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சிறந்த பண்ணையாளராக யாழ்.மாவட்டத்தில் முதலாமிடம் திருமதி த.புவனேஸ்வரி, இரண்டாமிடம் அ.அமிர்தராசா, மூன்றாமிடம் க.செல்வரத்தினம். கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாமிடம் திருமதி ம.சித்திராதேவி, இரண்டா மிடம் ஏ.உமாசந்தர், மூன்றாமிடம் ஏ.உமா ஆனந்த். முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாமிடம் ம.சரோஜினி, இரண்டாம் க. மகேந்திரன், மூன்றாமிடம் ச.விமலேந்திரா. வவுனியா மாவட்டத்தில் முதலாமிடம் க.வர்ண குலசிங்கம், இரண்டாமிடம் சா.ஜேசுதாசன், மூன்றாமிடம் ஏ.பி.மித்திரசேனா. மன்னார் மாவட்டத்தில் பி.பிரான்சிஸ், இரண்டாமிடம் ஆ.கணேசலிங்கம், மூன்றாமிடம் ஏ. உமாநாத் ஆகியோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.



கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஊடகக்கழகத்தினால் வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட செய்தி வாசித்தல்போட்டி ஆரம்ப நிகழ்வில் அதிபர் வே.ஞானகாந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் காணலாம். (63)

# தாய்லாந்தில் தீவிர போராட்டம்

# அரசின் அவசர நிலை அமுல்

## ஐந்து பேருக்கு மேல் கூடினால் கைது செய்ய நடவடிக்கை



(பாங்கொக்)

தாய்லாந்தில், எதிர்கட்சியினரின் தொடர் போராட்டத்தால், அவசரகாலநிலை அமுல்படுத்தப் பட்டுள்ளது.

தலைநகர் பாங்கொங்கில், இரண்டு மாதங்களாக தொடர் போராட்டம் நடந்து வருகிறது. பாங்கொங்கில் உள்ள பல்வேறு அரசு அமைச்சகங்களை முற்றுகையிட்டு, எதிர்க்கட்சியினர், போராட்டம் நடாத்துகின்றனர். எதிர்கட்சியினரின் தொடர் போராட்டத்தால், நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ள பிரதமர், யிங்லக், அடுத்த மாதம், 2ஆம் திகதி பொதுத்தேர்தலை அறிவித்துள்ளார். ஆனால், இந்த தேர்தலை, எதிர்கட்சியினர் புறக்கணித்துள்ளனர்.

தொடர் போராட்டத்தால் ஏற்பட்ட வன்முறையில், இதுவரை, பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

நிலைமையை கட்டுப்படுத்த, பிரதமர், யிங்லக், அவசர நிலையை அமல்படுத்தியுள்ளார். தலைநகர் பாங்கொங் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இதையொட்டி, ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட் டுள்ளது.ஐந்து பேருக்கு அதிகமாக கூடுவோரை விசாரணை இன்றி கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும், அரசின் இந்த உத்தரவை மதிக்கப்போவ தில்லை, பிரதமர் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும் என, போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

# ஏற்றதாழ்வுகள் தொடர்பாக பாப்பாண்டர்-ஒபாமா சந்திப்பு

(நியூயோர்க்)

ஒபாமா, போப்பாண்டவரை பிரான்சிசை சந்தித்து பேசவுள்ளார் வரும் மார்ச் மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஒபாமா மார்ச் 27ஆம் திகதி போப்பாண்டவரை சந்திக்கிறார் என்று அமெரிக்க அதிபரின் செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

இந்த சத்திப்பில் உலகில் நிலவும ஏழ்மைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், ம்க்களிடையே வளர்ந்துவரும் ஏற்றத்தாழ்வுகளை போக்குவது குறித்தும் இருவரும் விவாதிக்கவுள்ளனர். அப்போது இத்தாலி அதிபர் மற்றும் பிரதமரை ரோமில் சந்திக்கவுள்ளார்.

மார்ச் 24ஆம் திகதி ஐரோப்பா செல்லும் ஒபாமா, 24, 25 ஆம் திகதிகளில் நெதர்லாந்தில் நடைபெறும் அணுசக்தி பாதுகாப்பு உச்சிமாநாட்டில் கலந்துகொள்கிறார். பின்னர் 26ஆம் திகதி தேதி பெல்ஜியத்தில் நடைபெறும் ஐரோப்பா மற்றும் அமெரிக்க உச்சிமாநாட்டில் கலந்துகொள்கிறார். அங்கு பெல்ஜியம் தலைவர்கள் மற்றும் நேட்டோ பொதுச் செயலாளரையும் சந்தித்து ஒபாமா பேசவுள்ளார்.

உலகச் செய்திகள்

# இயேசுவின் கைவிரலை சேதமாக்கிய மின்னல்

பிரேசிலில் உள்ள மீட்பர் கிறிஸ்து சிலையின் வலது கை விரல் மின்னல் தாக்கியதால் சேதமடைந்துள்ளது.

பிரேசிலின் ரியோ டிஜெனீரோ நகரிலுள்ள கோர் கொவடோ மலை உச்சியில் 2000 இற்கும் மேற்பட்ட அடி உயரத்தில் மீட்பர் கிறிஸ்துவின் சிலையுள்ளது. இச்சிலை உலகிலேயே 4ஆவது மிகப்பெரிய இயேசுவின் சிலையாகும்.

இது 9.5 மீற்றர்(31 அடி) உயரமுள்ள அடிப்பீடத்தோடு சேர்த்து 39.6 மீற்றர் உயரமும், 30 மீற்றர் அகலமும் உடையது. இதன் மொத்த எடை 635 தொன்கள் ஆகும்.

இந்நிலையில் கடந்த 14ஆம் திகதி கிறிஸ்து சிலையின் வலது கை விரல் மின்னல் தாக்கியதால் சேதமடைந்தது.

தற்போது இதனைச் சரிசெய்யும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேபோன்று கடந்த 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமும் மின்னல் தாக்கியது, இதில் தலை மற்றும் வலது கை சேதமானது குறிப்பிடத்தக்கது.

**அம்முக்குட்டியின்....** (5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவள் தன்னை மாய்த்துக்கொள்வதற்குச் சில மணி நேரங்களிற்கு முன்புதான் "அரியவாய்ப்பு, இறந்தபின்னும் பேஸ்புக் பார்க்கவேண்டுமா? கண்தானம் செய் வோம்." என்ற செய்தியைப் பதிவு செய்திருக்கிறாள். அவள் கடைசியாகப் பதிவு செய்த செய்தி ஒரு "முற்றுப்புள்ளி" மட்டுமே. எனது தங்கையைக் கூப்பிட்டு அந்த முற்றுப்புள்ளியைக் காட்டி "இதைப் பார்" என்று கத்தினேன். அந்தக் கணத்தில்தான் அவ்வளவு நேரமும் துக்கமா கோபமா ஆற்றாமையா கழிவிரக்கமா என உருத்தெரியாமல் என்னை இறுக்கமாக வைத்திருந்த மனநிலை அப்படியே சிதறிப் போனது. மனதில் வெறுமை மட்டுமே இருந்தது. அந்த வெறுமையைக் கண்ணீராலோ வாய்விட்டு அழுவதாலோ கடக்க முடியும். ஆனால் நான்தான் கல்நெஞ்சக்காரனாயிற்றே. ஒருதுளி கண்ணீரும சுரக்கமாட்டேன் என்கிறதே. எழுதினால் மட்டுமே என்னால் இந்த வெறுமையைக் கடக்க முடியும்.

அவளை நான் பார்த்ததில்லை. தொலைபேசியில் கூட உரையாடியதில்லை. 2015 இல் நேரில் சந்திக்கலாம் என முகப்புத்தகத்தில் செய்தி அனுப்பியதற்கு, காத்துக் கொண்டிருக்கிறேன் என்றாள்.

இப்போது அவளது முகப்புத்தகப் பக்கம் மட்டுமே என்னோடிருக்கிறது. அவளைக் குறித்து நான் எழுதிய இந்தக் குறிப்புகளை நான் அவளது முகநூல் சுவரில் பதிவிடுவேன். அவளது முகநூல் பக்கமும் ஒருநாள் செயலிழந்து போகும்.

நான் அவளது கவிதைகளுக்குத் தருவதாகச் சொல்லியிருந்த முன்னுரையும் அவள் என்னை வரைந்த இந்தப் படமுமே என்னிடமிருந்து அவளுக்கும் அவளிடமிருந்து எனக்கும் எஞ்சியுள்ளன.


# அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028:6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 'வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்' இதற்கமைய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரான குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்ட வணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

*அதற்கமைய இக் கூட்டங்களிற் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

*கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

*அதில் தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

*சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படி தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மேற்படி தெரிவினை மேற்கொள்ளுவார்.

இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்தப்படுவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| தொ. இல | கிளைகளின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி | நேரம் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அனலைதீவு | 01 | திரு.வை.கைலைநாதன் | 26.01.2014 | மு.ப.10.00 மணி | தலைமைக் காரியாலயம், அனலைதீவு ப.நோ.கூ.ச |
| 02 | அனலைதீவு | 03 | திரு.பா.குருபரன் | 26.01.2014 | மு.ப.10.00 மணி | தலைமைக் காரியாலயம், அனலைதீவு ப.நோ.கூ.ச |
| 03 | அனலைதீவு | 05 | திரு.பா.பாலவரதன் | 26.01.2014 | மு.ப.10.00 மணி | தலைமைக் காரியாலயம், அனலைதீவு ப.நோ.கூ.ச |

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை
857, கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்
17.01.2014

ஒப்பம்:- வீ.கே.அருந்தவநாதன்
கூ.அ.உ.ஆணையாளர்
யாழ்.மாவட்டம்

(C/2600)

# வடமராட்சி கிழக்கு மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவி

சேவாலங்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பிரதேச மீனவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



நேற்றையதினம் நாகர்கோவில் கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 40 மீனவர்களுக்கு இந்த தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மைக்கல் ஜே.சிஸன், மீனவர்களுக்கான படகு இயந்திரங்களை வழங்கிவைத்தார். நிகழ்வில் அவர் உரையாற்றுகையில்,

நாகர்கோவில் பிரதேசத்துக்கு நான் 2002 ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் பணியாற்றும் போது இங்கு வந்துள்ளேன். அதன்பின் இன்று இங்கு வரும்போது மிகவும் மோசமான நிலையில் மேற்படி பிரதேசம் அழிவடைந்ததை இட்டு மனவேதனை அடைகிறேன்.

ஆனாலும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் இப்பிரதேசம் ஓரளவேனும் முன்னேற்றம் அடைந்து வருகிறது. வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் மிகவும் அழகிய பிரதேசங்களாகும். ஆனால் இங்குள்ள மக்களின் வாழ்க்கைதான் அழகில்லாமல் உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தூதுவரகங்களில் பணியாற்றும் தூதுவர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் போது நீங்கள் பணியாற்றும் நாடுகளில் மக்களின் வாழ்க்கை தொடர்பாகவும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடரபாகவும் கேட்டறிந்து கொண்டார். அவர் யுத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ளார்.

எனவே யுத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட உங்கள் வாழ்க்கையை சேவாலங்கா நிறுவனத்தின் உதவியுடன் முன்னேற்ற 40 பேருக்கு தலா 4.5 இலட்சம் ரூபா பெறுமதியான படகு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனை வைத்து வாழ்வாதராத்தையும் தொழிலையும் மேம்படுத்துவது உங்கள் கைகளிலே தங்கியுள்ளது.

யுத்தத்திற்கு பின் மக்கள் வாழ்க்கையில் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம், வீடுகள் காணிகள் போன்றவற்றை இன்னமும் சீர் செய்யப்படாமையால் அவர்களின் வாழ்வில் மேலும் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்கின்றனர்.

அவர்களின் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்பதற்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கடுமையாக உழைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு சேவா லங்கா நிறுவனத்தில் இணைப்பாளர் குமார நவரட்ண, மாவட்ட இணைப்பாளர் எஸ்.கண்ணன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மீன்பிடி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸவரன், மருதங்கேணிப் பிரதேச செயலர் ஏ.திருலிங்கநாதன் மற்றும் முக்கிய பிரதிநிதிகள், அப்பகுதி மீனவர்களும் கலந்து கொண்டனர். (116)

# நீதிமன்றில் கைபேசி ஒலித்ததால் தடுப்பு

வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, கையடக்கத் தொலைபேசியினை ஒலிக்கவிட்டவரை நீதிமன்ற நடவடிக்கைகள் முடியும் வரையிலும் தடுத்து வைத்திருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் எம்.ஜ.வகாப்தீன், பொலிஸாருக்கு உத்தரவிட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றது.

நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, வழக்கினைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த மேற்படி நபரின் கையடக்கத் தொலைபேசி திடீரென ஒலித்தமையினால் நீதிமன்றத்தின் அமைதி பாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, குறித்த நபரை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார், நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, நேற்றுப் பிற்பகல் 3 மணிவரை அவரைத் தடுத்து வைக்கும்படி பொலிஸாருக்கு, நீதவான் உத்தரவிட்டார்.

# ஆன்மீகப் பேரணிக்கு ஆதரவு சிவதொண்டர் அமைப்பு அழைப்பு

ஆலயங்களின் புனிதத் தன்மை பாதுகாக்கப்படவேண்டும் என்றும் ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்கள் மற்றும் மத நிந்தனை செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் இன்று நடத்தவுள்ள ஓம் நமசிவாய ஆன்மீக பிரார்த்தனை வாகன பவனிக்கு சிவதொண்டர் அமைப்பு பூரண ஆதரவை வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்விற்கு சிவதொண்டர்கள் மற்றும் சிவமங்கையர்கள் உட்பட அனைத்து சிவனடியார்களையும் பக்திபூர்வமாக பங்குபற்றி சிவமூல மந்திரமாகிய ஓம் நமசிவாய மந்திரத்தை மகிமைப்படுத்துமாறும் மேற்படி அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சிவதொண்டர் அமைப்பு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாடு உட்பட தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள ஆலயங்களில் அண்மைக்காலமாக மத நிந்தனை செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன.

அத்துடன் இளைஞர், யுவதிகளிடம் ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகள் குறைந்து செல்கின்றன. இதனாலேயே அண்மைக் காலமாக இளையோரிடையே விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

எனவே, இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழி இளைஞர், யுவதிகளிடையே ஆன்மீகம் சார் செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதேயாகும்.

இதற்காக ஓம் நமசிவாய என்ற மந்திரத்தின் மகிமையை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். இதன் ஒரு அங்கமாக சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள ஓம் நமசிவாய ஆன்மீக வாகன பவனியை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகின்ற இந்த ஆன்மீக நிகழ்விற்கு எமது அமைப்பு பூரண ஆதரவை வழங்குகின்ற அதேவேளை, இந்த நிகழ்வில் அனைத்து இந்துப் பெருமக்களையும் இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றது.

இந்தப் பவனி செல்கின்ற பாதைகளிலுள்ள சைவ வித்தியாசாலைகள், இந்து அமைப்புகள் மற்றும் வீடுகளுக்கு முன்பாக பூரண கும்பம் வைத்து இதனை மகிமைப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு மீதான வழக்கு மார்ச் மாதம் விசாரணை

(கொழும்பு)

தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஐந்து மனுக்களை மார்ச் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதென உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான சந்திரா ஏக்கநாயக்க, பீ.பி. அலுவிகார ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழு, இந்த மனுக்களின் நியாயத்தன்மை பற்றி பிரதம நீதியரசர் முன்னிலையில் விசாரிக்கப்படும் என்று தீர்மானித்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் இலக்கு, நோக்கம் என்பன இலங்கையின் ஆள்புல எல்லைக்குள் தனிநாடு அமைப்பதே என நீதிமன்றம் பிரகடனப்படுத்த வேண்டுமென இந்த மனுக்களிலும் கேட்கப்பட்டுள்ளது.

## றெக்ஷியன்...

எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கமலேந்திரன் மற்றும் றெக்ஷியனின் மனைவி சார்பாக சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஆஜராகியிருந்தார்.

## அமெரிக்காவுடன்...

போர்க்குற்ற விசாரணைகளை நடத்த நியாயமற்ற வகையில் இலங்கையை அமெரிக்கா இலக்கு வைப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறான தீர்மானங்கள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏனெனில்இவ்வாறான நடவடிக்கைகள் நல்லிணக்க முனைப்புக்களை மோசமாக பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜெனிவா...

நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியல்ல மற்றும் தலதா அத்துகோரள ஆகியோர் ஆளும் கட்சிப் பிரதிநிதிகளுடன் இணைந்து கொண்டு விஜயம் செய்யவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், ஊடகங்களில் இவ்வாறு வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தால் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிப்பது குறித்து தீர்மானிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மனித...

நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து நாட்டின் பிந்திய களநிலைவரம் குறித்து பேசியிருந்தார்.

இந்தநிலையில், அவர் திடீரென நேற்று வொஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

வொஷிங்டனில் அவர், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள், காங்கிரஸ் மற்றும் செனெட் உறுப்பினர்களை சந்தித்து தொடர் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார்.

## மனிதப்...

பிரதான வீதியிலிருந்து 75 மீற்றர் தூரத்தில் குடிநீர் விநியோக திட்டப் பணியில் ஈடுபட்டவர்கள் குடிநீர் குழாய் பொருத்துவதற்காக கடந்த டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை குழி தோண்டியபோது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இந்தப் புதைக்குழி மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் இதுவரை 11 தடவைகள் தோண்டப்பட்டன. நேற்று முன்தினம் இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரையிலும் 42 எலும்புக் கூடுகளும் எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று மீட்பு குழுவில் அங்கம் வகிக்கும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதற்கு அப்பால் சிறுவர்களின் பற்கள், பெண்கள் அணியும் முத்துமாலைகளின் முத்துகள், உடைந்த வலைகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியின் எல்லை எதுவரை உள்ளது என்பதனை கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளோம் என்று மேற்படி புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவில் அங்கம் வகிக்கும் அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரத்ன தெரிவித்தார்.

அத்துடன், இந்த மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு வரும் மனித எலும்புக் கூடுகளுக்குரியவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பது தொடர்பில் கண்டறிவதற்கு நீண்ட நாட்கள் தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த மனிதப் புதைகுழியில் இருந்து தொடர்ச்சியாக மனித எலும்புக் கூடுகள் மாத்திரமே மீட்கப்பட்டு வருகின்றன. பாரிய அளவிலான தடயப்பொருட்கள் எவையும் இதுவரை மீட்கப்படவில்லை என்றார்.

இந்தப் புதைகுழி நேற்று 13 ஆவது தடவையாக தோண்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நீதியரசர்...

கல்லூரிகளில் கல்வி பயின்ற இவர், மேற்கிந்திய பார்படோஸ் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணி (சட்ட வரைவு) பட்டம் பெற்றார். இந்நிலையில் இவர், 1979 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக அனுமதிக்கப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட முன்னர் இவர், ஏழு வருடங்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக கடமையாற்றியுள்ளார்.

## வடக்கு...

என தன்னை வெளிக்காட்டும் ஆளுநரை மாற்றவில்லை. இதற்கு காத்திரமான ஒரு முடிவோ, தீர்மானமோ இதுவரை இல்லை. இதை யாருடைய முகத்திற்காகவும் விடமுடியாது.

எதிர்வரும் யூலை வரை ஆளுநருக்கு பதவிக்காலம் இருப்பதால் அதைப்பற்றி ஜனாதிபதி கதைக்க வேண்டாம் என முதலமைச்சருக்கு கூறியதைத் தொடர்ந்து அது நின்றுவிட்டது.

ஆனாலும் இது விடயம் குறித்து எதிர்வரும் 27 ஆம் திகதிக் கிடையில் தீர்க்கமான சுமுகமான தீர்வு, முடிவு ஒன்று கிடைக்காவிடில் வடமாகாண சபை போர்க்களமாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடிய நிலைமைக்கு நாங்கள் செல்லவேண்டி ஏற்படும் என சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

ஒரு சாதாரண ஊழியரைக் கூட நியமிக்கவோ மாற்றவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முடியாது எனின் சாதாரண தொழிலாளி கூட மதிக்கமாட்டார். இந்நிலை மாற்றப்படவேண்டும். இதற்கு நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக சந்தை வியாபாரிகள் போராட்டம்

(பருத்தித்துறை)

புதிதாக அமைக்கப்பட்டுள்ள பருத்தித்துறை நகரசபையின் மரக்கறிச் சந்தையின் கீழ்த்தளப் பகுதியில் தம்மை வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரி பருத்தித்துறை சந்தை வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நேற்று காலை சந்தையின் கீழ் தளத்தின் மேற்குப் பகுதியில் ஒன்று கூடிய வியாபாரிகள் தமது வியாபாரப் பொருட்களை வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர். அங்கு வந்த பருத்தித்துறை நகரசபையினர் சந்தையை அப்புறப்படுத்த முனைந்தனர். அதன்போது வியாபாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் முறுகல் ஏற்பட்டது.

நகரசபையினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். சம்பவத்தை அறிந்து அவ்விடத்திற்கு வந்த பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், வியாபாரிகளுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா.ரவீந்திரனை சுமூகப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுகளைச் செய்தார். பேச்சுவார்த்தைக்கு வியாபாரிகள் தரப்பில் 10 பேரும் நகரசபை உபதலைவர் க.பத்மநாதன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், நகரசபை உறுப்பினர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதன்போது பிரபல மரக்கறி வர்த்தகர் விஜயரட்ணம் விஜயகுமார் தெரிவிக்கையில், தாம் தமது வியாபாரம் மேற்கொள்ளும்போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பல கடிதங்கள் நகரசபைத் தலைவருக்கு அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பியிருந்தோம் அதற்கும் எவ்வித பதிலும் தரப்படவில்லை.

அத்துடன் மேல் தளத்தில் சந்தை அமைக்கப்பட்டதால் நாம் எதிர்கொள்கின்ற 10 குறைபாடுகளை சுட்டிக்காட்டியுள்ளோம். நகரசபை நிர்வாகம் எங்களுடைய கோரிக்கையைக் கருத்தில் கொள்ளாமல் விடாப்பிடியாக மேல் தளத்திற்குச் செல்லுமாறு விரட்டுகின்றது. அவ்வாறு செல்லாவிட்டால் வேறு வியாபாரிகளைக் கொண்டு வந்து நகரசபையே சந்தையை நடாத்தும் என அச்சுறுத்துகிறது எனவும் தமக்கு கீழ்த்தளத்தில் வியாபாரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வலியுறுத்தினார்.

ஆனாலும் பேச்சுவார்த்தையில் சுமூகமான தீர்வு எட்டப்படாமல் முறிவடைந்ததது. ஆனாலும் வியாபாரிகள் சந்தையின் மேற்குப் பக்கமாக உள்ள கீழ்த்தள விறாந்தையில் மரக்கறி, பழங்களை வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் இச்சந்தைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அனுராதபுரம், தம்புள்ள பகுதியிலிருந்து வியாபாரிகளை அழைத்து வந்து நகரசபை சந்தையை நடாத்தப் போவதாக கூறப்பட்டதாக வியாபாரிகள் ஆதங்கப்பட்டனர். (109)

# களவுபோன மோட்டர் மீட்பு சந்தேக நபர்கள் இருவர் கைது

(மன்னார்)

மன்னார் காத்தான்குளம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து 2012 ஆம் ஆண்டு களவு போன நீர் இறைக்கும் மோட்டரை விடத்தல் தீவு பொலிஸார் நேற்றைய தினம் மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரையும் கைது செய்துள்ளனர்.

சுமார் 25 ஆயிரம் பெறுமதியான குறித்த மோட்டர் கடந்த 2012 ஆம் ஆண்டு திருடப்பட்டு வவுனியா நான்காம் கட்டைப் பகுதியில் விற்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடத்தல் தீவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையில் மோட்டரும் மீட்கப்பட்டுள்ளதுடன், இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையில் விடத்தல்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி.கே.குணதிலக, உதவிப்பொலிஸ் சோதகர் குணரத்ன, பி.சி. 41827 ராஜபக்ஷ, பிசி. 77677 சுபாஸ், பி.சி 89134 செல்வக்குமார், பி.சி. 89030 ஜெயப்பிரியன் ஆகிய பொலிஸார் ஈடுபட்டு மோட்டரையும் மீட்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். (113)

# கறுப்புப்பட்டியலில் 500 வாகனங்கள்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளை அடுத்து 500 வாகனங்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மேலும் 130 வாகனங்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்கவரத்துத்திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள வாகனங்களை தடைசெய்வது குறித்து பரிசீலித்துவருவதாகவும், எனினும் குறித்த வாகனங்களின் உரிமையாளர்கள் வாகனங்களை திருத்தி பயன்படுத்துமாறு மூன்று முறை விடுக்கப்படும் அறிவுறுத்தலுக்கு செவிசாய்க்கவில்லையெனில் தடைசெய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

# விபத்துக்களில் சிக்கும் சிறுவர்கள்; வருடாந்தம் 500 பேர் உயிர்ப்பலி

(கொழும்பு)

திடீர் விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் 500 சிறுவர்கள் வரை உயிரிழந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

திடீர் விபத்துக்கள் காரணமாக சுமார் 18 ஆயிரம் சிறுவர்கள் அங்கவீனமடைகின்றனர். திடீர் விபத்துக்கள் குறித்து போதிய புரிதல் இல்லாமையே இதற்கான காரணம்.

இந்த திடீர் விபத்துக்களில் நான்கில் மூன்றுக்கு மேற்பட்ட விபத்துக்களை தவிர்த்து கொள்ள முடியும்.

வீடுகளில் மற்றும் பாடசாலை விளையாட்டுக்களின் போது சிறுவர்கள் இவ்வாறான திடீர் விபத்துக்களை சந்திப்பதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களுக்கு நட்டஈடு

(கிளிநொச்சி)

2012 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து 2013 ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு கட்டம் கட்டமாக நட்டஈடு வழங்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முதற்கட்டமாக குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, சேத விபரங்களுக்கு அமைய 35 குடும்பங்களுக்கு கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நட்டஈடு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் சுமார் 900 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக அடையாளம் கண்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# கைவிடப்பட்டது வழக்கு

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டாரவிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வழக்கை கைவிடுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பல்கலைகழகங்களுக்குள் செல்வதற்கு தடைவிதித்து அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த உத்தரவிற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழு மேன்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையே இதற்கு காரணமாகும்.

# புதுமை மாதா கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதுமைமாதா ஆலயத்தின் கொடியேற்றம் இன்று காலை 6 மணிக்கு நடைபெறும்.

திருப்பலி முடிவடைந்ததும் திருநாள் ஆரம்ப கொடியேற்றம் பங்குத்தந்தை றோ.நேசராசாவினால் ஏற்றிவைக்கப்படவுள்ளது.

மாலை ஆதாரணைகள், 5 மணிக்கு தினமும் நடைபெற்று அடுத்தமாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (27)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சிங்கப்பூரில் தொழில்வாய்ப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட 40 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிங்கப்பூரில் தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்ளவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் விஜயதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட மேற்படி முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு தொழிலை வழங்குவதற்கு சிங்கப்பூர் உடன்பட்டுள்ளது. இதன்படி விரைவில் சிங்கப்பூரிலிருந்து வருகைதரும் குழுவினர் இவர்களுக்கான நேர்முகத்தேர்வினை நடத்தவுள்ளனர்.

இவர்களுக்கு தச்சுவேலை, மேசன் வேலை, பொருத்துநர் வேலை, இலத்திரனியல் போன்ற தொழில்கள் வழங்கப்படவுள்ளது. இவர்கள் அனைவரும் மேற்குறித்த தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்து சான்றிதழ்களையும் வைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாகாண ஆட்சிமன்றக் குழுக்கூட்டம் மூன்று மாதமாக நடக்கவில்லை

## - சிவாஜிலிங்கம் சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாண ஆட்சி மன்றக்குழுக்கூட்டம் மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னும் கூட்டப்படவில்லை. ஒருசிலரது நிலைப்பாட்டிலேயே நிர்வாகம் செல்கிறது.

அவ்வாறு செல்லமுடியாது நிர்வாகக்குழு மூலமே தீர்மானம் எடுக்கமுடியும் எந்தக் குழுக்கூட்டமும் இடம்பெறாத நிலையில் நாம் என்ன செய்யமுடியும். இதனால் குழப்பமான நிலை நீடிக்கின்றது. என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குற்றம் சுமத்தினார்.

இவ்வாறான குழப்பநிலை எல்லா இடங்களிலும் நீடிக்கிறது. அமைச்சரவைக் கூட்டம் மட்டும் நடக்கின்றது. ஒருசிலரே முடிவுகள் எடுக்கின்றனர். அவ்வாறு செய்யமுடியாது இவ்வாறான நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் என்ன செய்யமுடியும் என சாதாரணமான ஊழியர்களிடம் கூட எண்ணத்தோற்றுவித்துள்ளது. இதற்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாகாண ஆட்சியில் இருக்கக்கூடிய முதலமைச்சர் உட்பட சபை உறுப்பினர்களிடம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உயர் பீடத்திடமும், இது குறித்து ஊடகவியலாளர் மாநாட்டின் மூலம் கேட்டு முறையிட்டு நாம் கவலைப்படுகின்றோம். வெட்கப்படுகின்றோம்.

இதற்கான தீர்வை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அனைவருக்கும் தெளிவு படுத்தவேண்டிய நிலை காணப்படுவதாகவும், இதேவேளை வல்வெட்டித்துறை நகரசபை வரவு செலவுத்திட்ட கூட்டத்திற்குச் சென்ற 5 உறுப்பினர்களை அதன் தலைவரின் ஆட்கள் விரட்டிவிட்டு வரவு செலவுத்திட்டத்தினை நிறைவேற்றியுள்ளனர். எதிராக வாக்களித்த 7 பேர் அடிப்படை உரிமை மீறல் மூலம் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால் வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவருக்கு விசாரணை இல்லை.

இது எந்த விதத்தில் நியாயம். இது குறித்து பொலிஸிலும், மனித உரிமை ஆணைக்குழுவிடம், முதல்வரிடமும் முறையிட்டுள்ளோம். இது தான் தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிர்வாக நிலை என யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிவாஜிலிங்கம் குற்றம் சுமத்தினார். (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.